Registered as a Newspaper

தரமான
★ சேட்டிங்
★ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட் ஆடைகள்
சின்னஞ்சிறுவர்களின் சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22 நவீன சந்தை, யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இம்போட்டர் நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன் பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ் வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடி மீ 30 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 30 (14 08 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர் 156

## ரூ. 100, ரூ. 50 முத்திரைகள்

யாழ்ப்பாணம், ஆக 14

யாழ்- பெரிய தபால் நிலையத்தில் தற்பொழுது 100 ரூபா, 50 ரூபா பெறுமதியான முத்திரைகள் விற்கப்படுகின்றன.

பொதுமக்களின் தேவைக்கேற்ப முத்திரைகள், வான் கடிதங்கள் வழங்கப்படும் என்றும்—

வியாபார நோக்குடன் வருபவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவே வழங்கப்படும் என்றும்—தபால் நிலைய அதிபர் தெரிவிக்கிறார். (ஓ-10)

## இன்று புலமைப் பரிசில் பரீட்சை

யாழ்ப்பாணம், ஆக 14

5 ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சை இன்று நடைபெறுகிறது.

யாழ் மாவட்டத்தில் 89 நிலையங்களில் நடைபெறும் இந்தப் பரீட்சையில் சுமார் 9 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

இந்தப் பரீட்சைக்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு வெ. சபாநாயகம் உதயனுக்குத் தெரிவித்தார். (ஓ-க)

## 22 ஆம் திகதி தெரியும்

கொழும்பு, ஆக 14

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரின் பெயர் இம்மாதம் 22இல் அறிவிக்கப்படும் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

## மண்டேலா ஆஸ்பத்திரியில்

கேப்டவுன், ஆக. 14

தேசிய ஆபிரிக்கக் காங்கிரஸின் தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டு அரச மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

அண்மையில் தான் மண்டேலா தனது 70 ஆவது பிறந்த தினவிழாவைக் கொண்டாடினார்.

சுவாசப்பை வருத்தத்தினால் அவர் அவஸ்தைப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## ஹெலியின் சிதறல்கள் கண்டுபிடிப்பு

புதுச்சேரி, ஆக 14

நேற்றுக் காணாமற்போன இந்திய எண்ணெய், இயற்கைவாயுக் கமிஷனுக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்றின் சிதறுண்ட பகுதிகள் நேற்று புதுச்சேரியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதில் பயணம் செய்த பத்துப் பேரும் என்னவானார்கள் என்பது தெரியவில்லை.

பத்திரிநாத் எண்ணெய்த் துறப்பண மேடையில் இருந்து இந்த ஹெலிக்கொப்டர் பத்துப் பேருடன் நேற்றுப் புறப்பட்டது பின்னர் காணாமற் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## இடைவழியில் கொழும்பு திரும்பியது மெயில்

# ரயில் பாதையில் குண்டுகள் வெடிப்பு!

### பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட ஏழு ஜவான்கள் மரணம்

மாங்குளம், ஆகஸ்ட் 14

**மாங்குளம் பகுதியில் ரயில் பாதைகளில் குண்டுகள் வெடித்ததில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த ஏழு ஜவான்கள் உயிர் இழந்தனர். ரயில் பாதைகள் பலத்த சேதத்துக்கு உள்ளாகின.**

மாங்குளத்திற்கும்— புளியங்குளத்திற்கும் இடையிலும் மற்றொரு குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது. அந்த உண்டான ஆட்சேதம் பற்றிய விவரம் தெரியவரவில்லை.

நேற்றுக்காலை சுமார் பத்து மணி அளவில் மாங்குளம் பகுதியை பெரும் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கலக்கின. அதனால் நகரத்திலும், அதனை அண்டிய பகுதிகளிலும் பெரும் பதற்ற நிலை தோன்றியது.

ரயில் பாதைகளை அண்டிப் புதைக்கப்பட்ட குண்டுகள் ஒரே வேளையில் வெடித்ததாலேயே அந்தப் பெரும் சத்தங்கள் கேட்டதாகப் பின்னர் அறியவந்தது.

குண்டு வெடிப்பினால் ரயில் பாதைகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த ஏழு ஜவான்கள் மரணமானார்கள். மற்றும் நால்வர் காயமுற்றனர்.

மாங்குளம் ரயில் பாதைப்பாலத்தில் மூன்று வெடி குண்டுகள் ஒரே சமயத்தில் வெடித்தன.

இரண்டு இடங்களில் ரயில் பாதை தகர்த்தெறியப்பட்டது.

ரயிலுக்குச் சேதம் விளைவிக்கும் நோக்கத்துடன் வைக்கப்பட்ட கண்ணி வெடிகளை ரயில் பாதையில் இருந்து அகற்றிக் கொண்டிருந்த போதே மூன்று குண்டுகளும் வெடித்ததாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, வெள்ளிக்கிழமை இரவு கொழும்பிலிருந்து புறப்பட்டு வவுனியாவில் தங்கி நின்று, நேற்றுக்காலையில் அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப் (8 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுப் பகுதி வழமைக்கு திரும்பியது

நெடுந்தீவில் கடந்த புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை இந்திய அமைதிப்படையினர் பலத்த தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

புதன்கிழமை அதிகாலை நெடுந்தீவின் சில பகுதிகளிலும், கரையோரப் பகுதிகளிலும் இந்திய அமைதிப்படையினர் ஹெலிகொப்டர் மூலம் தரையிறக்கப்பட்டனர்.

அமைதிப்படையினரின் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்ற போது ஹெலிக்கொப்டர்களில் இருந்தும், கடல் பகுதியில் இருந்தும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதேவேளை படகுச் சேவைகளும் இரண்டு நாட்களாக நிறுத்தப்பட்டிருந்தன.

சகல பகுதிகளிலும் தேடுதல் நடத்திய படையினர் நேற்று சனிக்கிழமை தமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டு முகாம்களுக்கு திரும்பினர்.

தேடுதல் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்ட இளைஞர்கள் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

நெடுந்தீவுப் பகுதி நேற்று வழமைக்கு திரும்பியது. கடல் வழிப் போக்குவரத்தும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. (அ-111)

## தமிழகத்தில் வைத்து கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி, ஆக 14

★ இந்திய அமைதிப் படை நிபந்தனை அற்ற போர் நிறுத்தத்தை மேற்கொள்ளவேண்டும்.

★ தமிழகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாதிகள் அல்லர்; அவர்கள் போராளிகள். ஆகவே அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

சாவகச்சேரி இராணுவ முகாமில் இடம் பெற்ற சந்திப்பொன்றின்போது பொதுஸ் தாபனங்களின் பிரதிநிதிகள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டேயுடன் பலாலி, பளை, முகாம்களின் பொறுப்பதிகாரிகளும் சமுகம் அளித்திருந்த இச் சந்திப்பில் தென்மராட்சி பச்சிலைப் பள்ளி பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள், வர்த்தக சங்க மற்றும் அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகளும் சமுகம் அளித்திருந்தனர்.

இந்திய அரசிடம் நம்பிக்கை வைத்திருந்த விடுதலைப் புலிகள் திலீபனின் உண்ணாவிரதம் மதிக்கப்படாததாலும், ஸ்ரீலங்கா அரசால் கைது செய்யப்பட்ட போராளிகளின் மரணத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமையாலுமே இன்று நம்பிக்கை அற்றவர்கள் ஆகி விட்டனர் என்றும் சந்திப்பின் போது அமைதிப்படை அதிகாரிகளிடம் எடுத்துக் கூறப்பட்டது. (ஓ-31)

## தேர்தல் கோரி வீதியில்போராடுவேன் என்கிறார் ரெனி

என்னை அரசனாக்கினாலும் சரி கொலை செய்தாலும் சரி சுதந்திரமான தேர்தல் ஒன்றை நடத்தும்படி கோரி வீதியில் இறங்கிப் போராடுவேன்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்த பின்னர் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமல்கோட்டே சந்தியில் திரு. டி மெல்லுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

திரு டி மெல் அங்கு சொன்னதாவது;

60 ஆயிரம் இந்தியத் துருப்புக்கள் இன்றுநாட்டில் உள்ளன. 8லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து விட்டனர்.

பேச்சுச் சுதந்திரம், ஜனநாயகம் இன்றுநாட்டில் இல்லை.

சுதந்திரமான, நீதியான பொதுத் தேர்தல் நடத்தப்படாவிடில் நானே வீதிக்கு வந்து போராட்டம் நடத்துவேன்.

மக்களும் இப்போராட்டத்தில் இறங்கவேண்டும் நான் போராடப் போகிறேன். என்னைக் கொன்றாலும்சரி, அரசனாக்கினாலும் சரி போராடுவதினின்று என்னைத் தடுக்க முடியாது.

தெற்கில் இரத்த ஆறு ஓடுகிறது பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளன–

இப்படி திரு. ரொனிடிமெல் தெரிவித்தார்.

## கண்ணியை வேடிக்கச் செய்தனர்

வவுனியா, ஆக 14

கடந்த வார மத்தியில் புளியங்குளத்திற்கும் நெடுங்கேணிக்கும் இடையில் சன்னாசி பரந்தனில் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியை ரோந்து சென்ற அமைதிப் படையினர் கண்டு பிடித்து வெடிக்கச் செய்தார்கள்.

அப்போது இடம் பெற்ற துப்பாக்கிச் சமரில் போராளிகள் தரப்பில் ஒருவரும் ஜவான் ஒருவரும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இப்பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலில் 40க்கும் மேற்பட்ட பொதுமக்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதே வேளை—

புளியங்குளம்- நெடுங்கேணி வீதியில் வழமையான போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. (ஓ-164)

## மீண்டும் 7 மணிக்கு ஊரடங்கு

வடமராட்சி பகுதியில் ஊரடங்கு நேரத்தில் மீண்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் இரவு 9 மணி முதல் காலை 5மணிவரை அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு நேற்று முதல் மீண்டும் இரவு 7 மணியிலிருந்து காலை 5 மணி வரை அமுல் செய்யப்படும் என்று அமைதிப் படையினர் அறிவித்துள்ளனர். (ஓ-160)

### ஆரம்ப ஆசிரியர்:

## கடிதம் கிடைக்காதோர்...!

ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவைக்கால முன் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள கடிதம் கிடைக்காதோர் கல்விச் சேவை ஆணைக்குழுவுடன் (ச. எஸ். சி) தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-க)

## ஈழத் தமிழர் பிரச்சினைக்கு முக்கியத்துவம்

தி.மு.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஈழத் தமிழர் பிரச்சினை முக்கிய அம்சமாக இருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் தி.மு.க. தலைவர் கருணாநிதி செய்தியாளர்கள் மத்தியில் பேசினார்.

அப்போதே இத்தகவலை அவர் வெளியிட்டார். (அ-எ)

## புதிய பிரதேச முகாமையாளர்

மக்கள் வங்கியின் வட பிரதேச முகாமையாளர் திரு. மு. கணேசசுந்தரம் இம்மாதம் 17ஆம் திகதி முதல் கொழும்பு மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

17ஆம் திகதி முதல் வடபிரதேச மக்கள் வங்கி முகாமையாளராக திரு. கே. சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் மட்டக்களப்பில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஆக 14

''ஷப்ரு'' கிண்ணத்திற்கான ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியின் இன்றைய மாற்றம் செய்யப்பட்ட ஆட்டங்கள் வருமாறு:-

காலை 8 30 மணிக்கு யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதித்து யாழ் யங்ஸ்ரார்ஸ் அணி மோதும்.

நண்பகல் 12. 30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் யாழ். (8 ஆம் பக்கம் பார்க்க)

### காங்கேசன்துறை

# நடேஸ்வராச் சந்தியில் நேற்றுத் துப்பாக்கிச் சூடு!

### ஒரு ஜவான் பலி, மற்றவர் காயம்

காங்கேசன்துறை ஆக 14

காங்கேசன் துறை, நடேஸ்வராக் கல்லூரிச் சந்தியில் பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்த இந்தியப்படை ஜவான்கள் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன் காரணமாக ஜவான் ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானதாகவும், மற்றொருவர் பலத்த காயங்களுக்கு உள்ளானதாகவும் தெரிய வந்துள்ளது.

நேற்றுக்காலை 9. 45 மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

நடேஸ்வராச் சந்தியில் உள்ள கடை ஒன்றில் ஜவான்கள் இருவர் பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்ததாகவும்- அப்பொழுது பின்புறமாக இருந்து இனந்தெரியாதோர் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில்பெரும் பதற்றம் நிலவியது. கடைகள் அனைத்தும் அவசர அவசரமாக இழுத்து மூடப்பட்டன.

இதேவேளை படையி (8 ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு நிலைய இளைஞரை பிரமுகர்குழு நேற்றுச் சந்தித்தது

வடமராட்சி, ஆக.14

காங்கேசன் துறை புனர்வாழ்வு நிலையத்திலுள்ள இளைஞர்களை, நேற்று தமிழ் ஈழம் மக்கள் மன்றத்தைச் சேர்ந்த பிரமுகர் குழு சென்று சந்தித்தது.

தமிழ் ஈழம் மக்கள் மன்றத்தின் தலைவர் திரு. க. சிவானந்தசுந்தரம் தலைமையிலான இந்தக் குழுவில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பகுதிகளைச் சேர்ந்த மன்ற உறுப்பினர்கள் அடங்கி இருந்தனர்.

இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் பெரும் துன்பத்திற்குள்ளாகி வருவதாக பொதுமக்களிடையே இருந்துவரும் புகார் குறித்து, பலாலி முகாமில் அண்மையில் மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டேயினால் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது தமிழ் ஈழம் மக்கள் மன்றப் பிரதிநிதிகளினால் எடுத்துரைக்கப்பட்டது.

அப்போது துன்புறுத்தல்கள் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும், வேண்டுமானால் நேரில் சென்று பார்வையிடும்படியும் மேஜர் ஜெனரல் பாண்டே கூறியிருந்தார்.

அதை அடுத்தே நேற்றைய சந்திப்பு இடம் பெற்றது.

காவலில் உள்ள இளை (8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

14 - 08 - 88

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
09.05 முதல் 10.35 வரை

ராகுகாலம்:
04 35 முதல் 06.05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஆடிப்பூரம்

### முச்சந்தி முரளி



உள்ளுக்குள்ளே இருந்து போராட்டம் நடத்துவது கஷ்டம் என்டு வெளியிலே வந்தவர் வீதியில் இறங்கிப் போராடத் தயங்க மாட்டார் தானே....!

### ஆரம்ப ஆசிரிய விரிவுரையாளருக்கான

## அறிவுறுத்தல் கூட்டம் நாளை வேம்படி மகளிர் கல்லூரியில்

யாழ். மாவட்டத்தில் தெரிவான ஆரம்ப ஆசிரியர்களுக்கு சேவைக்கு முன் பயிற்சி அளிக்கும் விரிவுரையாளருக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை பதினைந்தாம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டம் காலை பத்துமணிக்குநடைபெறவுள்ளதால் சகல விரிவுரையாளர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை ஆரம்ப ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் ஏழு கல்லூரிகளில் கடமையாற்றும் 14 கடேற் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மாலை 4 மணிக்கும்–

ஏழு கல்லூரிகளிலும் நிலையப் பொறுப்பாளர்களாக கடமையாற்றும் அந்தந்தக் கல்லூரி அதிபர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் மாலை 5 மணிக்கும்–நடைபெறவுள்ளன (ஓ-க-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கைலாசப் பிள்ளையார் கோவிலுக்குக் கிட்ட சகல வசதியும் அடங்கிய வீடு விற்பனைக்குண்டு. அத்துடன் Side Valve மோரிஸ் மைனரும் Latest Chaly உம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இல்: 7, நிக்கலஸ் ஒழுங்கை, சச்சேரி - நல்லூர் வீதி, சுண்டுக்குளி. (5712)

மிகவும் நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டிகள், [D/Freezer, Refrigerator உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- Uni Services Engineers, No 19, Aseervatham Lane, off Hospital Road, Jaffna. (5732)

கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட Honda C 50 Economy, Deuxe, மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். 166, கோவில் வீதி, நல்லூர். [கந்தன் கருணைக்கு அருகாமை] [5733]

தையல்மெஷின், T. V லென்ஸ், தளபாடங்கள், றேடியோ, ஹோல்செற் மற்றும் பலவித பாவித்த பொருட்கள் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ்சந்தியருகில்.) (5715)

Goldi Sausages. Beef, Chicken, Fish, Mutton, Pork, Beef Hot Dogs, Frank furters, Lingus, Powkies, Chicken, Meet balls, Beef Meet Balls, Streaky Bacon, Back Bacon, Special Bacon, Ham, மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சழிவு தரப்படும் தொடர்பு;- Nallur Farm Centre, C/o, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C-6062)

### TOEFL

TOEFL பரீட்சைக்கான Barons, Arcos, Kits ஆகியவற்றின் பதிவு செய்யப்பட்ட கசற்றுக்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ''சிவாஜி லஷ்மீஸ்'', Audio Division 19, Brown Road, Jaffna. (5727)

### காணி விற்பனைக்கு

யாழ் / வண்ணை பண்ணை ஐயனார் கோவிலடியில் டிஸ்பென்சரிக்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நல்ல சுற்றுடலில் உள்ள காணி. தொடர்பு: 17, ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம். 5677

யாழ். கண்டி வீதியில், புங்கன்குளம் றெயில்வே ஸ்ரேசனுக்கு அண்மையில் 1 பரப்புக் காணியும், வீடும், (கிணறு - நல்ல பிரயோசனங்கள் உள்ள) உடனடியாக விற்பனைக்குண்டு. சிறந்த வசதிகளையும், நல்ல சுற்றுடலையும் கொண்டது. வர்த்தக நிலையம் அமைக்கக் கூடிய வசதிகளும் உண்டு. தொடர்பு: K.S. முத்துலிங்கம், றேடியன் இன்ஸ்ரிரியுட் அரியாலை, யாழ்ப்பாணம் (C6173)

### கோழி விற்பனை

இன்னும் ஒரு வருடத்திற்கு முட்டை இடக்கூடிய கோழிகள் (Hysex Brown) விற்பனைக்குண்டு. ஒரு கிலோ 50/- ரூபா. தொடர்பு கொள்ளவும்:- ஆ. கனகலிங்கம், 36, மசட்டீன் வீதி, யாழ்ப்பாணம். [5720]

### Dolly Tea
### டொலி தேயிலை

அதிக சுவை, கூடிய சாயம்; நறுமணம்; இலவச ஸ்ரிக்கர்; இத்தனைக்கும் உடனே நாடுங்கள்: டொலி தேயிலை. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:-டொலி, கல்வயல் வீதி, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி. (5660)

### தளபாட விற்பனையும் கொள்வனவும்

மரக் கடைச்சல் வேலைக்கும் நிலை, யன்னல், கதவு மரத் தளபாடங்கள் ஓடருக்கு செய்வதற்கும் உடனடியாக வாங்குவதற்கும் விற்பதற்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். (1) மகாலக்ஷ்மி ரேட் குறூப், 29, அராலி வீதி, யாழ்ப்பாணம். (2) 75, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். (5679)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை சிவப்புப்பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், HY-Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (சி/6066)

ஒரு நாள் செற்ற (B 380 Bab - Cock) சேவல் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், புறொய்லர் குஞ்சுகள் 12/8; 19/8 லும், கோல்டன் கொமட் பிறவுண் சேவல் பேட்டுக்குஞ்சுகள் 17/8; 19/8; 23/8; 27/8ம் திகதியிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும். 1. R. S. K. Farm, முருகபதி உடுவில்; 2. குபேரன் ஸ்ரோர்ஸ் கொக்குவில் சந்தி. கொக்குவில். (5668)

### விற்பனைக்கு

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards). திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

சகல விதமான ரேடியோ, வீடியோ, T.V. ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும். வீடியோ (Head) IC டிரான்சிஸ்டர், அன்ரனா பூஸ்டர் ஆகியவற்றையும் பதிவு செய்த Audio Cassets முதலியவற்றையும் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்: R.V. Centre, 1st Floor, No F6, Model Market, Jaffna. உரிமையாளர்-விசு. (5661)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Cull Birds முட்டை இட்டு இளைத்த இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் தரப்படும். Nallur Farm Centre, C/o Nallur Video Centre, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (5068)

## தேவை

நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மரீனா(Morris-Marina) அல்லது டொயாற்ரோ கொறுலா (Toyata Corolla) கார் தேவை. தொடர்பு:- J. P. T. Ltd 3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம் (5684)

யாழ் / நகரில் அமைந்துள்ள பிரபல ஏஜென்சி நிறுவனம் ஒன்றிற்கு நாளாந்த பதிவேட்டுக் கணக்கு (Stock Clerk) மற்றும் கணக்கியல் லிகிதர் (Accounts Clerk) ஆகிய பதவிகளுக்கு ஆங்கில அறிவும், தட்டச்சு வேலை தெரிந்தவர்களும் விண்ணப்பிக்கவும். 323, C/o உதயன் யாழ்ப்பாணம். (5678)

எமது கல்வி நிறுவனத்திற்கு ஒரு பெண் லிகிதர் தேவை. ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து தெரிந்தவராய் இருத்தல் வேண்டும். விரும்பியோர் கல்வித் தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 178, C/o உதயன் யாழ்ப்பாணம். (5723)

### அறை தேவை

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் தங்குவதற்கு யாழ் குடாநாட்டின் எப்பகுதியிலாவது ஒரு தனி அறை தேவை. 317, C/o உதயன், யாழ்ப்பாணம். (5658)

### பணிப்பெண்கள் தேவை

சிங்கப்பூரில் தமிழ் குடும்பங்களுக்கு வீட்டு வேலைகளைக் கவனிக்கக் கூடியபெண்கள் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் ஒழுங்கு செய்யப்படும். ஆகக்கூடிய மாதாந்த சம்பளம் 3300 ரூபா. கல்வி அறிவு அவசியம் இல்லை. சிங்கப்பூர் வரை பிரயாண ஒழுங்குகள் கவனிக்கப்படும். துரைசிங்கம், 376B, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (ஸ்ரான்லி கல்லூரி முன்னால்) (5685)

### வீட்டு பணிப்பெண் தேவை

சிங்கப்பூரில் வசிக்கும் தமிழ் குடும்பத்தினருக்கு 12 வயதான ஊனமுற்ற ஆண்பிள்ளையை பராமரிக்க ஒரு பணிப்பெண் தேவை. 40 -45 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. போக்குவரத்துச் செலவும் சகல வசதிகளும் நல்ல சம்பளமும் கொடுக்கப்படும். 17-ந் திகதிக்குப்பின் தொடர்பு கொள்ளவும் T. காராளசிங்கம்.268/1, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (5719)

### WANTED

Nurses with Operating Theatre, Labour Room and ward experience Salary attractive. Apply: Central Nursing Home, Thirunelvely. (5683)

Old aged Tamil, Single (Poor hearing) with G C. E (Ordinary Level) and I. A B. Final-Fluent in Sinhala & English. Past Experience in Typing, Accounts ect. needs relief employment with lodging. Apply to 179, C/o Uthavan, Jaffna. (5728)

### பதவி வெற்றிடம்

கோழிப்பண்ணை பராமரிப்பதற்கும், தோட்ட வேலைக்கும் ஆண்கள் தேவை. 18-8-88 அன்று காலை 10 மணிக்கு, 'சிமாட்டிரெக்ஸ்ரைல்ஸ்' யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும். (சிமாட்டி பாம், மைலங்காடு, சுன்னாகம்- Farm Address.) (5680)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த B. Sc. பட்டதாரி ஆசிரியருக்கு, 33 வயதிற்குட்பட்ட விஞ்ஞான / கலை பட்டதாரி; கணக்கியல் கற்றுத் தொழில் புரியும் மணப்பெண் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: 308, C/o உதயன், யாழ்ப்பாணம். (5524)

### கடை வாடகைக்கு கொடுக்கப்படும்

காங்கேசன் துறை வீதியில் கில்னர் கட்டடத்திற்கு சமீபமாக (மனோகரா தியேட்டருக்கும், கில்னர் பில்டிங்குக்கும் இடையில்) நவீன வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு 322, C/o உதயன் யாழ்ப்பாணம். (5674)

### தவறிவிட்டது

சி. க. கந்தசாமி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க மேற்பார்வையாளர் ஆகிய எனது அடையாள அட்டையை தலைமைக் காரியாலயமான K K. S. வீதியிலுள்ள தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்குச் செல்லும்போது தவறவிட்டுவிட்டேன். இத்துடன் எனது காரியாலய அடையாள அட்டையும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தலைமைக் காரியாலயத்தில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (5686)

### பாடல் பதிவு செய்தல்

நீங்கள் விரும்பும் மதுரகான பாடல்களை நவீன எலக்ரோனிக் ஈக்குவலைசர் மூலம் ஸ்ரீறியோ முறையில் பதிவு செய்து கொள்ளவும் நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மிகப் பழைய, புதிய பாடல்களைத் தெரிவு செய்து கொள்ளவும், நாடுங்கள்: விக்டர் அன் சன்ஸ் 100 ஸ்ரான்லி வீதி, விக்ரேஸ் மியூசிக் சென்ரர் 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி. விக்டர் அன் சன்ஸ் 81, ஸ்ரேசன் வீதி, சுன்னாகம். (C 6053,

### திருமணப்பந்தல்

யாழ்/ இந்து வேளாள குலப் பெற்றோர் 27 வயதுடைய கனடா வங்கியில் கடமையாற்றுபவருக்கு அழகிய மணமகளையும் செவ்வாய்க் குற்றமுள்ள 20 வயது அழகிய பெண்ணுக்கு உயர்ந்த பதவியிலுள்ள மணமகனையும் தேடுகிறார்கள். கனடா செல்லக்கூடிய வசதியும் உண்டு குறிப்பு விபரத்துடன் 321 C/o உதயன் யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளுங்கள். (5665)

## கல்வி

### தொழிற் கல்வி

புதிய பிரிவுகள் ஆரம்பம் — 19 - 8 - 88 1. Radio Officers (Ship) P. M G, 2 Electronics, 3. Telex Operators-(International) இருபாலாரும். பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும். தொடர்பு: Keen Centre — Thirunelvely. (5545)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் யாழ் மாவட்டத்திலுள்ள வீடுகளில் வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். தனித்தனியாகவோ, சிறு குழுக்களாகவோ வயது வித்தியாசமின்றி ஆண், பெண் இருபாலாரும் தத்தமது முகவரியை மாத்திரம் அனுப்பி வைக்கவும். உடன நேரில் தொடர்பு கொள்ளப்படும். 318, C/o உதயன, யாழ்ப்பாணம். (5659)

### WIN INN LADIES ACADEMY

மங்கையர்க்கு ஓர் வரப்பிரசாதம். விஞ்ஞான ரீதியிலான மனையியல் வகுப்புகளும் கீழைத்தேய மேலைத்தேய இசை வகுப்புகளாகிய வயலின், வீணை, கிற்றார், ஓகன், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம் முதலியனவும் தரமான ஆசிரியர்களால் சிறப்பாகக் கற்பிக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் காலை 9 - 12 வரை. 61/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (5724)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**க. வி. கதிரவேலு**
(Charted Accountant)

தோற்றம் 08- 12- 1903 — மறைவு 28- 07- 1987

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

நாளை (15 8 88) திங்கட்கிழமை அவரது முதலாவது ஆண்டை நினைவு கூருகின்றோம.

''Agricolas'' பழைய டச் வீதி, பத்தமேனி, அச்சுவேலி.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (5771)

## பிறந்த தின வாழ்த்து



**செல்வன் நிரேஷன்**

சுதுமலை தாவடியைச் சேர்ந்த சூரியகுமாரன் பரமேஸ்வரி (றஞ்சி) தம்பதிகளின் புதல்வன் நிரேஷன் தனது முதலாவது பிறந்த தினத்தை ஜேர்மனியில் 14 8-88 [ஞாயிறு] இன்று கொண்டாடுகிறார்

இவரை அப்பா, அம்மா, ஐயா, அம்மம்மா, மாமாமார்கள், சுவிஸ் மாமா, அத்தைமார்கள், அன்ரி ஆகியோர் பல்லாண்டு காலம் வாழ்க என்று வாழ்த்துகின்றனர் (5775)


## GERMANY

பயணம் செய்ய விரும்புபவர்களுக்கு

## S. P. ANTON

அறியத்தரும்

## ஓர் அவசரச் செய்தி

ஜெர்மனிக்கான பயண ஏற்பாடுகளைச் செய்வதற்காக என்னிடம் கடவுச் சீட்டுத் தந்திருக்கும் அனைவரும் உடனடியாக எமது கொழும்பு அலுவலகத்துக்கு வருமாறு அன்புடன் அறியத்தருகின்றேன்.

உங்கள் பயண அமைப்பாளர்,
**எஸ். பி. அன்ரன்**
(C/6194)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்
16. 8. 1988



**அமரர் த. வல்லிபுரம் அவர்கள்**
(முகாமையாளர்;
இலங்கை வங்கி, பருத்தித்துறை)

மலர்வு; 21 - 04 - 1936 — உதிர்வு 17 - 07 - 1983

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்வின் வழி காட்டியாய் வாழ்ந்து எங்கள் அனைவரையும் நல்வழி நடத்திய அன்புத் தெய்வத்தை எண்ணி வெந்து துடிக்கையிலே ஆறுதல் தந்து அனைவரையும் தோள் கொடுத்து எமது குடும்பத்தலைவரின் மரணக் கிரிகைகளில் கலந்து கொண்டவர்கள், அனுதாப உரைநிகழ்த்தியவர்கள், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்கள், மலர்வளையங்களைச் சாத்தியவர்கள், மற்றும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

அத்துடன் எதிர்வரும் 16- 8- 88 ல் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரிகைகளிலும், அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமகன்
(5777)

## 1930 ஆசிரியர்கள் தெரிவாகினர்

கொழும்பு ஆக 14

அண்மையில் கல்வித் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் வெளியிடப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்குப் பகுதிகளிற்கு என்று மட்டுமே இந்த ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தம் ஆயிரத்து 930 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளர். இவர்களில் பெரும் பாலானவர்களிற்கு இது தொடர்பான அறிவித்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுவிட்டன. ஏனையவர்களிற்கு தற்போது அனுப்பப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் வருமாறு:-

| | |
|---|---|
| யாழ். மாவட்டம் | -1,053 |
| மன்னார் | -160 |
| வவுனியா | -114 |
| முல்லைத்தீவு | -63 |
| கிளிநொச்சி | -115 |
| மட்டக்களப்பு | -300 |
| அம்பாறை (அட்டாளைசேனை) | -125 |

(உ-9)

## உணவு முத்திரை

கோப்பாய் ஆக 14

கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் குடியிருப்பாளர்களுக்கு இலவச உணவு முத்திரைகள் ப. நோ. கூ. சங்க கிளைகளினால் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-72)

## விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பில்லை

அக்கரைப்பற்று நகரில் இடம்பெற்ற பிரபல சிங்கள வர்த்தகரான எட்மன் சில்வா குடும்பத்தின் கொலைக்கும், தமக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (இ-21)

## யாழ். இந்து முன்னணியில

யாழ்ப்பாணம் ஆக 14

1987 ஆம் ஆண்டு ஆறும் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ் இந்துக்கல்லூரியின் 33 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தின் வேறு எந்தப்பாடசாலைகளிலும் இவ்வளவு எண்ணிக்கை மாணவர்கள் இம்முறை சித்தியடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி 33 மாணவர்களும் 171முதல் 186 புள்ளிகளைப் பெற்றிருப்பதாக கல்லூரி வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் ஆக. 14

ஜெற் லைனேர்ஸ் விளையாட்டுக் கழகம் கரப்பந்தாட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டிகளை நடத்தவுள்ளது.

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய பதினேழாவது ஆண்டு விழாவை முன்னிட்டு இந்தப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

மென்பந்து கிரிக்கெட் போட்டி 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்களைக் கொண்டதாகவும்—

கரப்பந்தாட்டப் போட்டி 6 பேர் பங்குபற்றும் போட்டிகளாகவும் அமையும்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட

# இசை வேளாளர் குடும்பங்கள் நிவாரணம் இன்றி அவதி

## இழப்புகள் குறித்து மகஜர்

காங்கேசன்துறை ஆக 14

கடந்தகாலவன்செயல்களால் தமது இசைக் கருவிகளையும் உடைமைகளையும் இருப்பிடங்களையும் இழந்த இசைவேளாளர் குடும்பங்களுக்கு இதுவரை எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

இதுகுறித்து இலங்கை இசைவேளாளர் சங்கம் கவலைதெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்துக்கு முந்திய இராணுவ நடவடிக்கைகளாலும் அக்டோபர் மாதத்திற்குப் பிந்திய இராணுவ நடவடிக்கைகளாலும் இசை வேளாளர்களின் நாதஸ்வரம் தவில் மற்றும் உப இசைக் கருவிகள் உடைக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும், அவர்களதுஉடைமைகள்அழிக்கப்பட்டும் பெரும்பாதிப்புகள் ஏற்பட்டன.

சேதங்கள் இழப்புகள் பற்றிய விவரங்களை இசைவேளாளர் சங்கம் சேகரித்துப் பிரஜைகள் குழு ஒன்றியம், அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், புனர்வாழ்வுஅமைச்சு, யாழ். அரச அதிபர் மற்றும் புனர்வாழ்வு நிறுவனங்களுக்கு சமர்ப்பித்திருந்தது.

ஆனால் இதுவரை எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

இசைக்கருவிகள் சேதமடைந்ததால் அவர்கள் தொழில் செய்ய முடியாமல் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-68)

## திருமலை கச்சேரி ஊழியரின் பிரச்சினைகள் ஆராய்வு

திருகோணமலை ஆக. 14

திருகோணமலையைச் சேர்ந்த தமிழ் அரச ஊழியர்கள் 'மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்களைச் சேர்ந்த தமிழ் ஊழியர்கள் கடந்த 6 ஆம் திகதி சமூக சேவைகள் நிலையத்தில் கூடிக் கச்சேரி ஊழியர்களின் பிரச்சினை பற்றி ஆராய்ந்தனர்.

கூட்டத்திற்கு திரு.ரி. தவசிலிங்கம் தலைமை வகித்தார்.

கோட்டையிலுள்ள சிங்கள மக்களை முற்றாக அகற்றி விட்டு இந்திய அமைதிப்படையினர் பாதுகாப்பு வழங்கும் பட்சத்திலேயே நாங்கள் மீண்டும் வேலைக்கு திரும்ப முடியும் என்னும் அவர்களின் ஏகமனதான தீர்மானத்தைக் கூட்டத்தினர் ஆதரித்தனர்.

இதேவேளை இனிமேல் தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தால் இந்தியஅமைதிப்படையினர் ஊடாகவே அது நடைபெற வேண்டும் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (இ 150)

## இப்படியும் சுவரொட்டிகள்

கொழும்பு ஆக 14

கடந்த மாதம் 29, 30 ஆம் திகதிகளில் தென் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்ததற்காக பாதுகாப்புப்படையினருக்கு நன்றி தெரிவிக்கும் சுவரொட்டிகள் தென் பகுதிகளில் காணப்பட்டன என்று அறிவிக்கப் படுகின்றது.

ஜே. வி. பியினரின் பெயர் அச்சிடப்பட்டுள்ள இச் சுவரொட்டிகள் பற்றிப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ-எ)

சைனீஸ்

## ஹோட்டலில் குண்டு வெடிப்பு

திருகோணமலை, ஆக 14

கடந்த 7 ஆம் திகதி திருமலையில் கூட்டணிப் பிரமுகர் வீடு ஒன்றுக்கு குண்டு வீசப்பட்ட சம்பவத்தை அடுத்து பிற்பகல் 2.30 மணி அளவில் வடகரை வீதியிலுள்ள சைனீஸ் ஹோட்டலில் ஒரு குண்டு வெடித்தது.

அங்கு காவலுக்கு நின்ற இலங்கைப் பொலீஸார் இருவர் காயமடைந்தனர்.

அடுத்து சில நிமிட நேரம் பொலீஸாரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. நகரில் பதற்றம் நிலவியது. கடைகள் இழுத்து மூடப்பட்டன. மக்கள் முண்டியடித்து வீடுகளுக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றனர். நகரவீதிகள் யாவும் வெறிச்சோடிக் கிடந்தன. (இ-150)

பஞ்சரத பவனியைத் தரிசிக்க

# மாவிட்டபுரத்தில் பக்தர் வெள்ளம்!

காங்கேசன்துறை, ஆக 14

மாவைக் கந்தன் ஆலயத் தேர்த் திருவிழா கடந்த வியாழனன்று பஞ்சரத பவனியுடன் பக்தர் வெள்ளம் புடை சூழ, வர்ண பகவான் நீர் தெளித்து ஆசி கூறக் கோலாகலமாக நடைபெற்றது.

விசேடமாக அலங்கரிக்கப்பட்ட ஐந்து தேர்களிலும் விநாயகர், சோமாஸ்கந்தர், ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி, ஆறுமுக சுவாமியார், சண்டேசுவரர் ஆகிய மூர்த்திகள் வீதியுலா வந்த கண்கொள்ளாக் காட்சியைப் பல பகுதிகளிலிருந்து மழையையும் பொருட்படுத்தாது வந்திருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பக்தி சிரத்தையுடன் கண்டு களித்தனர்.

அதிகாலை 4 மணியளவில் மாவை ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகி 7. 30 மணியளவில் மூர்த்திகள் தேருக்கு எழுந்தருளினர்.

பஞ்சரத பவனி இடம்பெற்ற பின்னர் பிற்பகல் 3 மணியளவில் மூர்த்திகள் பச்சை சாத்தி மங்கள வாத்தியம் முழங்க ஆலயத்திற்கு எழுந்தருளிச் சென்றனர்.

பறவைக் காவடிகளும், ஆட்டக் காவடிகளும் பிற்பகல் வரை வந்துகொண்டே இருந்தன.

அங்கப்பிரதிஷ்டை செய்வதிலும், அடி அழிப்பதிலும் பெரும் எண்ணிக்கையான ஆண்களும், பெண்களும் ஈடுபட்டனர்.

மாவிட்டபுரம் பிரதான வீதி பக்தர்களின் நெருக்கடியால் போக்குவரத்துக்கு தடைப்பட்டது. அவ்வழியால் அடிக்கடி வந்து போன அமைதிப்படையினர் பக்தர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் நடந்து கொண்டனர்.

சாரணர்கள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், தெல்லிப்பளை பாதுகாப்புச் சேவைத் தொண்டர்கள் பக்தர்களின்போக்குவரத்துபாதுகாப்புஒழுங்குகளைக் கவனித்தனர்.

வலி. வடக்கு உதவி அரச அதிபர் திரு. வை. இராசையா தலைமையில் கிராமசேவையாளர்கள், அரச அதிகாரிகள் பக்தர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தனர்.

பண்ணிசை நிகழ்ச்சிகளும், முருகன்புகழ்பாடும் பாமாலைகளும் இசைக்கப்பட்டன. (ஒ-க-68)

## ஆடிப்பூர விழா

வடமராட்சி, ஆக 14

அல்வாயூர் மேல் மருவத்தூர் ஆதி பராசக்தி ஆலய ஆடிப்பூர விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (இ-160)

காங்கேசன்

# சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் மீண்டும் இலங்கை வங்கிக் கிளை

யாழ்ப்பாணம், ஆக. 14

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் உள்ள இலங்கைவங்கிக்கிளையை மீண்டும் திறந்து இயங்கச் செய்யுமாறு யாழ். இலங்கை வங்கிமாவட்ட அலுவலகத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தஉத்தரவு தொலைபேசி மூலம் இலங்கை வங்கியின் தலைமையகத்திலிருந்து விடுக்கப்பட்டது.

இதைப்பற்றிஇலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் திரு. க. கணேசமூர்த்தி தகவல் தருகையில் —

கடந்த பல வருடங்களாக காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன வளவினுள் இலங்கை வங்கிக் கிளை செயற்பட்டு வந்தது.

சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்கு சிமெந்து வாங்க வருபவர்கள் இந்தக் கிளையில் பணத்தைக் கட்டிப் பற்றுச்சீட்டைப் பெறவேண்டும்.

அந்தப் பற்றுச்சீட்டை கூட்டுத்தாபனத்தில் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே சிமெந்தை பெற்றுக் கொள்ளக் கூடியதாக வசதி செய்யப்பட்டிருந்தது.

பின்னர் சில வருடங்களின் முன் சிமெந்து கூட்டுத்தாபன வளவில் நடந்த அசம்பாவிதங்களினால் இந்தக் கிளை மூடப்பட்டிருந்தது.

தற்போது தலைமைப் பீடத்திலிருந்து கிடைத்த உத்தரவை அடுத்து இந்தக் கிளை மீண்டும் இயங்க வைக்கப்பட உள்ளது.

சிமெந்து வாங்குவதற்காக கூட்டுத்தாபனத்துக்கு வருபவர்கள் காங்கேசன்துறைச் சந்திக்குச் சென்று அங்குள்ள இலங்கை வங்கிக் கிளையில் பணத்தைக் கட்டி பற்றுச் சீட்டுப் பெறும் சிரமம் தவிர்க்கப்படும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-9)

## முதல் வாரம் தடை தளர்த்தப்படும்

மட்டக்களப்பு, ஆக 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒவ்வொருமாதமும் முதல் வாரத்தில் சிவில் நிர்வாகத் தடை தளர்த்தப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு—அம்பாறை அரசியல் பிரிவு மேற்படி அறிவிப்பை அறிக்கை மூலம் விடுத்துள்ளது. (இ-21)

## உணவு முத்திரை விநியோகம்

திருநெல்வேலி, ஆக14

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்குரிய புதிய உணவு முத்திரை விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

திருநெல்வேலிப் பகுதிக்குரிய புதிய முத்திரைகள் கடந்தவாரம் முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

புதிய உணவுமுத்திரைகளைப் பெற்றவர்களுக்கு முதல் இரண்டு மாத உணவுப் பொருட்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன. (உ-143)

விபத்தில்

## இருவர் காயம்

வடமராட்சி, ஆக. 14

லொறி - வான் விபத்தில் வானில் இருந்த இருவர் காயம் அடைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மூத்தவிநாயகர் கோயில் பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டது. (இ - 160)


கொம்பியூட்டர் பயிற்சி

யாழ்நகரிலும்! தெல்லிப்பளையிலும்!

Diploma in Computer Programming in Basic, Advanced Basic & Cobol Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

17-08-88 (Week day Batch - I)
26-08-88 (Week-end Batch - II)- 2 Months

INITIAL FEE: Rs. 400/- Only

★ வடமாகாணத்திலே,IBM உட்படநவீன Computer களில் கூடிய பயிற்சி மிகத் தரமான முறையில் அளிக்கப்பட்டு. பெறுமதி வாய்ந்த Diploma சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

Contact:

IDP
Institute of Data Processing

(9. 30 a.m) 342, K.K.S Road, (சிவன்கோவிலடி) யாழ்ப்பாணம்.
(3. 30 p. m) K.K.S. Road, (துர்க்கையம்மன்கோவிலடி) தெல்லிப்பளை.

(C 6168)



M 3 Travel's

பெருமையுடன் வழங்கும்

உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

✱ சவூதி அரேபியா:

வெற்றிடம்

1. Bulldozer Operator — (புல்டோசர் ஒப்பிறேற்றர்) 3
2. Exavaor Operator (எக்ஸ்ஸேவர் ஒப்பிறேற்றர்) 2
3. Crane Operator (கிறேன் ஒப்பிறேற்றர்) 2

மேற்குறிப்பிட்ட தொழில்களுக்கு எம்மிடம் ஏற்கனவே தொடர்பு கொண்டவர்கள் பிரயாணம் செய்துவிட்டனர். மிகுதி வெற்றிடங்களுக்கு உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

4. Cleaners (கிளினேர்ஸ்) உடனடியாகத் தேவை.
5. Catering Helpers (சிற்றுண்டிச்சாலை உதவியாட்கள்) ஓரளவு ஆங்கில அறிவு தேவை.
6. Carpenters (தச்சு வேலையாட்கள்)
7. Mason (கட்டிட வேலையாட்கள்)

✱ குவைத்:

1. Cleaners:-

சம்பளம் 37 டினர். சாப்பாடு இருப்பிட வசதி இலவசம். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் தொடர் கொள்ளவும்.

✱ உங்கள் தேவை எங்கள் சேவை.

✱ நம்பிக்கை, நாணயம் என்பவற்றுக்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம் இதுவே.

M 3 TRAVEL'S
T. இந்திரநாதன்
சற்குணவாசா,
காங்கேசன்துறை.
(பஸ் வழி இல. 769, 764, 763.)

(C 6164)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலி ப. நோ.கூ. சங்கம்

வெற்றுச் சாக்கு

## கேள்விப் பத்திரம் கோரல்

எமது சங்கத்தால் பலரகமான 6000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்வி கோரப்படுகின்றன.

ரூபா 5/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து வைப்புப் பணமாக ரூபா 500/- செலுத்தி கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம்" எனக் குறித்து பதிவுத் தபால் மூலம் அனுப்பவும். சாக்குகளை சுந்தோர் நேரத்தில் பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 24.08.88.**

பொதுமுகாமையாளர்
(C 6149) புலோலி, பல நோ. கூ. சங்கம்.


யாழ் - கிளிநொச்சி மாவட்டங்களில்

# கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு வீதம் அதிகரிக்கிறது

யாழ்ப்பாணம், ஆக. 14

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கர்ப்பிணித் தாய்மாரின் இறப்புகள் அதிகரித்து வருகின்றன. சமீபத்திய புள்ளி விவரங்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

1987ஆம் ஆண்டு 23 கர்ப்பிணித் தாய்மார் மரணம் அடைந்திருக்கின்றனர்.

ஆனால் இந்த ஆண்டு ஜூலைவரை மட்டும் 23 பேர் இறந்துள்ளனர்.

இந்த ஆண்டு முடிவடையும்போது இந்த எண்ணிக்கை 40 ஆக அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★ கர்ப்பிணித் தாய்மார்கள் சரியான முறையில் வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தப்படாதது.

★ கர்ப்பிணித் தாய்மாரை நல்ல முறையில் கவனிப்பதற்கு மருத்துவமாது இல்லாதது.

★ கர்ப்பிணிகளை உடனடிச் சிகிச்சைக்காக கிராமங்களில் இருந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல அம்புலன்ஸ் வசதி இல்லாதது.

★ அசம்பாவிதங்களினால் கர்ப்பிணித் தாய்மார்கள் பதற்றம் அடைந்தது. உரிய சிகிச்சை பெற முடியாமற் போனது.

கர்ப்பிணித் தாய்மாரின் மரண அதிகரிப்புக்கு இவையே முக்கிய காரணம் என யாழ். சுகாதாரத் திணைக்களம் சுகாதார அமைச்சுக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

சுகாதாரத் திணைக்களம் தெரிவித்த புள்ளி விவரத்தின்படி காங்கேசன்துறையில் -7, கோப்பாயில் -3, கிளிநொச்சியில் -3, மானிப்பாயில் -3, சாவகச்சேரியில் -2, ஊர்காவற்றுறையில் -2, யாழ் - மாநகரசபை எல்லைக்குள் -2, பருத்தித்துறையில் -2 என்ற ரீதியில் கர்ப்பிணித் தாய்மார்கள் இறந்துள்ளனர்.

இது தொடர்பான பூரண அறிக்கை ஒன்று சுகாதாரத் திணைக்களத்தினால் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(இ - 10)

## குடும்பஸ்தர் சுடப்பட்டார்

இளம்குடும்பஸ்தரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச் சம்பவம் அண்மையில் மட்டக்களப்பு நாவற்குடாவில் இடம்பெற்றது.

அதே இடவாசியான அழகையா புவனேஸ்வரராஜா (32 வயது) என்பவரே இறந்தவர் ஆவார். (இ-21)

## கள்வரின் திருவிளையாடல்

காங்கேசன்துறை, ஆக.14

மாவை முருகன் உற்சவத்தில், பக்தர்களின் நெரிசலில் குழந்தை ஒன்றின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டதுடன், மற்றொரு குழந்தையின் சங்கிலி காணாமல் போய்விட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி. வடக்கு உதவி அரச அதிபர் அலுவலகத்தில் இவ்வாறு பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் கைக்கடிகாரங்கள் மற்றும் பொருள்களும் அங்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஒ-68)


31 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. இராமலிங்கம் பாலேந்திரா
(படப்பிடிப்பாளர்)

மலர்வு: 2-7-1935 உதிர்வு: 16-7-1988

பாசத்தின் இருப்பிடமே!
அன்பின் அணையா ஒளி விளக்கே!
நேசம் உள்ள பெரிய மைந்தனைக் காண
நீர், கொழும்பு மா நகர் சென்றவேளை
காலன் மனம் பொறுமல்
மனைவி தவிதவிக்க, பிள்ளைகள் துடிதுடிக்க
பறித்தானே பாதகனும் உம் உயிரை
இனித் தங்களை எப்பிறப்பில் காண்போம்?

தங்கள் பிரிவால் துயருறும்

மனைவி: நீற்று பாலேந்திரா,
பிள்ளைகள்:- றஞ்சினி, ரமேஷ், ராஜன், றூபன்.

நாரந்தனை,
ஊர்காவற்றுறை.

(5765)

NORTH CEYLON
MARKETTING STAFF
ASSOCIATION

பின்வருவோர் எமது குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்:
திரு. T. தில்லைநாதன்
பிரதேச முகாமையாளர்,
Darley Butler & Co. Ltd.,

உப-தலைவர்:
திரு. V. ஜெயதேவன்
பிரதேச முகாமையாளர்,
Ceylon Cold Stores Ltd.,

இணைச் செயலாளர்கள் :
திரு. R. ராஜேஸ்வரன்
பிரதேச விற்பனைப் பிரதிநிதி
E. B. Creasy & Co. Ltd.,

திரு. S. இராமச்சந்திரன்
பிரதேச விற்பனைப் பிரதிநிதி
Maliban Biscuits Manufacturies Ltd.,

பொருளாளர்கள்:
திரு. D. மனோகரன்
பிரதேச விற்பனைப் பிரதிநிதி,
Shaw Wallace & Headges Ltd.,

திரு. C. குகராஜன்
பிரதேச விற்பனைப் பிரதிநிதி,
Glaxo Ceylon Ltd.,

நிர்வாக சபை அங்கத்தவர்கள்:
திரு. N. இராஜதேவன்
பிரதேச விற்பனை ஊக்குவிப்புப் பிரதிநிதி,
A. Baur & Co. Ltd.,

திரு. C. N. இராதாகிருஷ்ணன்
பிரதேச முகாமையாளர்,
Lanka Milk Foods Ltd.,

திரு. N. சுபாஸ்சந்திரன்
பிரதேச விற்பனை ஊக்குவிப்புப் பிரதிநிதி,
Millers Ltd.,

எமது அடுத்த சங்கக் கூட்டம்
21.08.1983 ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணிக்கு
OLD PARK
CHINESE RESTAURANTஇல்
நடைபெறும்.

இப்படிக்கு,
செயலாளர்.

(C/6130)

Jaffna College
Institute of Technology,
VADDUKODDAI.

புதிய மாணவர்களைச் சேர்த்தல்

சகல பயிற்சி நெறிகளுக்குமான நேர்முகப் பரீட்சைகள் 19-08-88 (வெள்ளிக்கிழமை) 9-30 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் விண்ணப்பதாரிகள் அனைவரும் சான்றிதழ்களுடன் தவறாது சமுகம் தருமாறு வேண்டப்படுகிறார்கள்.

- பணிப்பாளர்

(C 6150)

North Lanka
Medical College
TENDER

Tenders are invited from furniture manufacturers for the supply of One hundred (100) students' Tables and Chairs as those used in Universities for Examinations. Tenders should be delivered or sent under registered cover to: Hony. Secretary, N. L. M. C., 164, Fourth Cross Street, Jaffna on or before 12.00 noon on Thursday 25th August, 1988.

Yours in Service,
Hony. Secretary
Board of Governors.

(C-6172)

90ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி தர்மராசா தனலக்ஷ்மி
உரிமையாளர்:
(வேல்ராசா ஸ்ரோர்ஸ் - மாங்குளம்)

மண்ணுலகில்: 29 - 12 - 1946 விண்ணுலகில்: 20 - 05 - 1988

"காலமெல்லாம் காத்திருந்தேன்,
காவியம் நீ படைப்பாய் என்று!
ஞாலமெல்லாம் கோலவடிவுடனே
கோவிலானயே லக்ஷ்மியே!
ஓலமிட்டு அழுகின்றோம் ஓடி நீ வாராயோ!
மாறாத அன்பினால் மகிழவைத்த
எம் தெய்வமே!
தீராத துயரந் தன்னில் தவழ வைத்து
எங்கு சென்றாய்?

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16-08-1988செவ்வாய் அதிகாலை கீரிமலை தீர்த்தக் கரையிலும் 17 - 08 - 1988 புதன் கிழமை காலை10மணியளவில் அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியமும் நடைபெறும்.

இவ் வைபவங்களில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(அன்னாரின் ஆத்மசாந்திக்காக மாங்குளம், மாவடிப் பிள்ளையார் கோவிலில் பூரணைத் திதியன்று அன்னதானம் வழங்கப்படும்.)

உங்கள் பிரிவால் தவிக்கும்,
அன்புக் கணவர், மகன்,
மாமி, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

தகவல்: கிருஷ்ணபிள்ளை தர்மராஜா
வட்டாரம்-12,
புங்குடுதீவு.

(5643)

புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறாம்

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் ...

Diploma in Computer
Programming
Basic

4 MONTHS

PRACTICALS ON:
C.P.U.
Cassette Drive
Disk Drive
Printer

A valuable certificate will be issued at the end.

கனடா, அவுஸ்திரேலியா
செல்பவர்களுக்கு மிக உகந்தது.

ஆரம்பம்.

வாரநாள்: 19-08-1988
வார இறுதி: 27-08-1988
Fees - மாதம்: 250/-

APTITUDE TEST 18.8.88

தேர்வுப் பரீட்சையில் அதிக புள்ளிகள் எடுக்கும் பரீட்சார்த்திக்கு Lady Lovelace Memorial Scholorship வழங்கப்படும்.

C.I.M.A., A.A.T., I.A.B.
நடைபெறுகின்றன.

JOIN THE LEADERS

SCHOOL OF BUSINESS
ADMINISTRATION

16, 3ஆம் குறுக்குத் வீதி,
(O.L.R. தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.

(C6156)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டர் கூட்டத்தைக் கண்டதும் காவலுக்கு வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விலகினர்

## திருமலைச் சம்பவங்கள் குறித்து மேலும் தகவல்கள்

திருமலையில் குண்டு வெடித்த தினமான 21 ஆம் திகதி திருமலைக்கச்சேரியில் கடமையில் ஈடுபட்டிருந்த தமிழ் அரச ஊழியர்களைத் தாக்குவதற்காக ஒரு கூட்டம் கம்பி, தடி, கம்புகள் போன்ற ஆயுதங்களுடன் உள்ளேபுகுந்து கலாட்டா செய்தது தொடர்பான விவரங்களை ஆராயுமுகமாக கடந்த முதலாம் திகதி திருமலை சமூகசேவை நிலைய மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கச்சேரியில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களும் கோட்டையிலுள்ள வேறு பல அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களும் கோட்டைக்கு வெளியேநகரத்தில்வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ள அரசாங்கக் காரியாலயங்களில் பணியாற்றும் தமிழ் ஊழியர்களும். அரச சார்புடைய திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களும், வங்கிகளில் கடமைபுரியும் தமிழ் ஊழியர்களுமாக சுமார் 400க்கும் அதிகமான ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான பொறியியலாளர் திரு. ரி. தவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மேடையில்அவருடன் தொலைத் தொடர்பு திணைக்களப் பிரதம பொறியியலாளர் திரு. எஸ்.கனகசூரியர் துறைமுக அதிகாரசபையைச் சேர்ந்த திரு. ஆர். கலியுகவரதன் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

சுமார் ஒன்றரை மணித்தியாலம் இடம் பெற்ற கலந்துரையாடலின் விவரங்களை இங்கு தருகிறோம்.

தலைவர்: இன்று நாங்கள் கூடியிருக்கும் விடயம் சகலருக்கும் தெரியுமென்று எண்ணுகிறேன். அதாவது கடந்த 21 ஆம் திகதி கச்சேரியில் கடமையாற்றிய தமிழ் ஊழியர்களைத் தாக்குவதற்கு ஆயுதங்களுடன் ஒரு கூட்டம் புகுந்தது. இது தொடர்பான விவரங்களை நேரடியாகப் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் எடுத்துக் கூறுமாறும் அது பற்றி அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் பற்றி கச்சேரி ஊழியர் எவராவது விளக்கினால் நல்லது.

கச்சேரி ஊழியர்:- நாங்கள் கடந்த 26 ஆம் திகதி ஒன்று கூடி வேலைக்குச் செல்வதில்லை எனத்தீர்மானித்துவிட்டு இணைப்பதிகாரியைச் சந்தித்து விவரங்களை எடுத்து விளக்கினோம். அதற்கு அவர் போதியளவு தமிழ் பொலீஸாரை பாதுகாப்புக்குப்போடுவதாகக் கூறினார். மற்றவர்களுடன் கலந்துஆலோசித்து விட்டு அறிவிப்பதாகக் கூறியிருந்தோம். அதனை அடுத்து இன்று காலை மேலதிக அரசாங்க அதிபரின் இல்லத்தில் கூடியபோது மகஜர் ஒன்று தயார் செய்து இணைப்பதிகாரிக்கும் அரசாங்க அதிபருக்கும்அனுப்புவதெனத் தீர்மானித்தோம். அதன் பிரதியொன்றைத் தலைவரிடம் கையளிக்கிறேன்.

இப்படிஅவர் கூறினார்.

### மகஜரில்

இந்த மகஜரில் அடங்கியவற்றை தலைவர் வாசித்துக் காட்டினார்.

அதில் நான்கு கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. அவையாவன:

★கோட்டையில் இருக்கும் அகதிகள் உடனடியாக அங்கிருந்து அகற்றப்படவேண்டும்.

★போதியளவுபாதுகாப்பு இந்திய அமைதிப் படையினரால் கோட்டைக்குள்ளும்கோட்டை வாசலிலும் வெளியே சர்வோதயச் சந்தியிலும் வழங்கப்பட வேண்டும்.

★ஜூலைமாதச்சம்பளம் பெறமுடியாதிருந்தவர்களுக்கு உடனடியாகச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★கஷ்டமான சூழ்நிலையில் கடமை புரியும் ஊழியர்களுக்கு கஷ்ட நிவாரணம் (Risk Allawance) வழங்கப்பட வேண்டும்.

இதனையடுத்து சபையினர் இந்த மகஜருடன் சேர்த்து வேறு ஒரு மகஜர் தயார் செய்து இந்தியப்பிரதமருக்கும் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கும் அனுப்ப வேண்டும். என்று கூறினர். அடுத்து பாதிக்கப்பட்ட ஊழியர் எவராவது இருந்தால் விவரங்களைக் கூறுமாறு தலைவர் கேட்டுக்கொண்டார்.

கச்சேரிஊழியர் ஒருவர்

அன்று நேரடியாக எந்தஊழியரும் தாக்கப்படவில்லை. கொஞ்சம் சுணங்கியிருந்தால் நாங்கள் தாக்கப்பட்டிருப்போம்என்பது உண்மை.

நான் கண்டவற்றைக் கூறுகிறேன். சிங்களக் காடையர்கள் சிலர் கைகளில் பலவிதமான ஆயுதங்களுடன் கச்சேரி வாசலுக்கு வந்தனர். அவர்கள் அசிங்கமான வார்த்தைகளைப்பிரயோகித்துக் கொண்டு வந்தனர். அந்த வார்த்தைகளை என்னால் விவரிக்க முடியாது. அவர்கள் ஆவேசத்துடன் காரியாலயத்திற்கு வந்தபோது நாங்கள் பயந்து கதவு, யன்னல்களை இறுக மூடிவிட்டு உள்ளே இருந்தோம்.

### வெளியே இராணுவத்தினர்

அவ்வேளை வெளியே இராணுவத்தினர் காவலுக்கு நின்றனர். எனினும் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. சிறிது நேரத்தின் பின்பு ஒரு ஜீப் வந்து அங்கு நின்றது. அதில் வந்த இராணுவத்தினர் அங்கும் இங்கும் ஓடினர். ஆனால் கூட்டத்தினரைக் கட்டுப்படுத்தவோ, கைது செய்யவோ இல்லை.

மற்றொரு கச்சேரி ஊழியர்;-

### தாக்க வந்த சிங்கள ஊழியர்

எங்களில் சிலரை சிங்கள ஊழியர்கள் காப்பாற்றினர். ஆனால் எங்களோடு வேலை செய்யும் ஒரு சிங்கள ஊழியர் ஒரு தடியை எடுத்துக்கொண்டு தாக்க முற்பட்டார். அவரைத் தடுத்தார் மற்றொரு சிங்கள ஊழியர். தாக்க வந்தவர் ஒரு சிற்றூழியர்.

மற்றொரு கச்சேரி ஊழியர்;-

அங்குள்ள அகதிக் கூட்டத்தில் காடையர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த அபயபுர, மிஹிந்தபுரத்தைச் சேர்ந்த சிலர் சம்பிகளுடன் ஓடி வருவதைக் கண்டேன். அகதிகள் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும் அல்லது கச்சேரி வெளியே கொண்டு வரப்பட வேண்டும் என்பது தான் எனது கோரிக்கை.

தொலைத் தொடர்புத் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியரில் ஒருவர்:-

அன்று நாங்கள் மூவர் மயிரிழையில் தப்பி வந்தோம். நடந்தது இது தான்:-

நானும் இன்னுமொரு ஊழியரும் உயர் அதிகாரி ஒருவருமாக கோணேசர் மலையிலுள்ள கோபுரத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தோம்.

### இராணுவம் நழுவியது

கோணேசர் மலைச் சந்திக்கு வந்ததும் ஒரு கூட்டம் எங்களைச் சுற்றி வளைத்தது. அவர்கள் கைகளில் ஆயுதங்கள். எங்களுக்கு உதவிக்கு வந்த மூன்று இராணுவ வீரர்களும் கூட்டத்தைக் கண்டதும் மெல்ல நழுவிவிட்டனர். எனது சேட்டில் ஒருவர் எட்டிப் பிடித்தார். நான் முடிந்தேன் என்று நினைத்தேன். அவ்வேளை திடீரென்று ஜீப் ஒன்று அங்கு வந்தது, அதில் ஏறிக் கொண்டோம்.

அந்த ஜீப் அங்கு வராவிட்டால் நாங்கள் மூவரும் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருப்போம். சடலங்கள் கூடக் கண்டு பிடிக்கப்படாமலிருக்கக்கூடும்.

கோட்டைக்குள் காடு மேடுகளூடாக தொலைத் தொடர்பு வயர்கள் செல்கின்றன.

அவ்வாறு காடு மேடுகளுக்குள் செல்லும் போது எங்களை வெட்டிக் கொலை செய்துவிட்டால் யார் பொறுப்பு?

ஆகவே அகதிகள் அங்கிருக்கும்போது நாங்கள் வேலைக்குச் செல்ல மாட்டோம். அகதிகள் அகற்றப்பட வேண்டும் அல்லது கச்சேரி வெளியே கொண்டு வரப்பட வேண்டும்.

### அரச அதிபர் நடவடிக்கை எடுக்கவில்லை

மற்றொரு கச்சேரி ஊழியர்:-

இச்சம்பவம் நடைபெற்றபோது அரசாங்க அதிபர் அங்கிருந்தார். அவர் எங்களைப் பாதுகாப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை. இலங்கை இராணுவத்தினர் அங்கு சடமையில் இருந்தனர். அவர்கள் கூட எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனையும் அந்த மகஜரில் குறிப்பிட வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

மற்றொரு கச்சேரி ஊழியர்:-

அந்த நேரத்தில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த உயர் ஸ்தானிகரும் வேறும் சுவீடன் பிரதிநிதிகள் மூவரும் அங்கிருந்தனர். அவர்களும் இச் சம்பவத்தைக் கண்டிருப்பார்கள்.

மற்றொரு ஊழியர்:-

ஆம் உண்மைதான். அவர்களிடம் கூறப்பட்டதாம் இது கொடுக்கல் வாங்கல் சண்டை என்று.

மற்றொரு ஊழியர்:-

நான் கண்டவற்றைச் சொல்கிறேன். இச்சம்பவம் நடைபெற்று ஒருவாறு ஓய்ந்து கொண்டு போகும் வேளையில் அரசாங்க அதிபர் இல்லத்திலிருந்து அரசாங்க அதிபரும் சுவீடன் பிரதிநிதிகளும் வெளியே வந்து கொண்டிருந்தனர். முன்னால் ஓர் இராணுவ வீரர் பின்னால் இரண்டு சுவீடன் பிரதிநிதிகள். அவர்கள் பின்னால் அரசாங்க அதிபர் அவரின் பின்னால் மற்ற இரண்டு சுவீடன் பிரதிநிதிகள். அவர்கள் பின்னால் இராணுவ வீரர் ஒருவர். இவ்வாறு தான் அவர்கள் வந்தனர்.

தலைவர்:- இக் கட்டத்தில் நான் ஒரு யோசனையைக்கூறவிரும்புகிறேன். இங்கு பேசியவர்கள் எல்லோரும் கச்சேரியை வெளியே கொண்டு வர வேண்டுமென்று கூறினீர்கள். எனது யோசனை கச்சேரி வெளியே வரக் கூடாது.

வெளியே வந்தால் நாங்களாகவே அவர்களுக்கு இடம் கொடுத்ததாக முடியும். அத்தோடு கோட்டையில் கோணேசர் ஆலயமும் இருக்கின்றது.

அங்கும் எமது மக்கள் பயம் பீதியின்றி வழிபடச் செல்லவேண்டும்.

ஆகவே எனது விருப்பம் கச்சேரி அங்கு இருக்கத்தான்வேண்டும். நாங்கள் அங்கு வேலைக்குச் செல்லத்தான் வேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை, அங்குள்ள சிங்கள அகதிகள் அனைவரும் அகற்றப் பட்டு இந்திய அமைதிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

ஒருவர்:- நல்லது தான் கோட்டைக்குள் இருக்கும் அகதிகள் மாத்திரமல்ல. சர்வோதய இயக்கக் கட்டடம் சிங்கள பௌத்த விடுதி அங்கிருந்து மணிக்கூட்டுக் கோபுரம் வரைபுதிய கட்டடங்களைக் கட்டி குடியமர்த்திருக்கிறார்கள். [illegible] அகதிகளும் அகற்றப்பட வேண்டும்.

மற்றொருவர்:- ஆம் அதுவும் நல்ல யோசனை. அங்கிருக்கும் அகதிகள் யார் என்பது பற்றி எங்களுக்கு நன்றாக விளங்கும். சென்ற இனக்கலவரத்தின் போது படுபாதகச் செயல்களைப் புரிந்தார்களே அவர்கள் தான் அங்கு அகதிகளாக இருக்கிறார்கள்.

வங்கி ஊழியர் ஒருவர்:- இக்கூட்டத்தில் நான் ஒரு திருத்தம் கொண்டுவர விரும்புகிறேன். அதாவது இவர்களை அகதிகள் என்று ஏன் கூறுகிறீர்கள்?

இவர்கள் பருப்பு மூடைகளுக்குமேல் இருந்து கொண்டு கொடிய செயல் புரிது வருகிறார்கள். கோணேசர் ஆலயத்தின் புனிதத்தன்மையைக் கூட இவர்கள் கெடுக்கிறார்கள். ஆகவே இவர்களை அகதிகள் என்று கூறக்கூடாது.

திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் என்று கூறவேண்டும்.

ஆகவே அகதிகள் என்னும் பதத்தை அகற்றிவிட்டு ,திட்டமிட்ட குடியேற்றம்' என்றுஉபயோகிக்க வேண்டும் எள்பது தான் எனது கோரிக்கை. (இதை அனேகர் வரவேற்றனர்)

சிறிது நேரத்தின் பின்னர் திரு, கலியுகவரதன் எழுந்து இவ்வாறு கூறினார்:-

தோழர் கூறிய கருத்துக்களை நாங்கள் இங்கு ஆராய்ந்தோம். அகதிகள் என்னும் சொற்றொடரை நீக்கிவிட்டு இவ்வாறு கூறிப்பிடுவோம், அதாவது- 1987 செப்டம்பர் மாதம் 30 ஆம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக

## பூஸா கைதிகள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தின் விவரம்

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தாம் உண்ணாவிரதம் இருக்கு முன்னர் தம்மை விடுதலை செய்யக்கோரி ஜூலை 23 ஆம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்குக் கடிதம் ஒன்றைஎழுதியிருந்தனர். அந்தக் கடிதத்தின்சாராம்சம் இங்கே தரப்படுகிறது.

29 - 07 - 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை—இந்திய சமாதான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் நியாய பூர்வமாக ஏற்றுக் கொண்ட கைதிகளின் விடுதலை ஒப்பந்தசரத்துக்களில் முக்கியமான அம்சமாகும்.

அதன் பிரகாரம் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளில் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் விடுதலை செய்யப்பட்டனர்.

மிகுதியாக இருந்த கைதிகளின் விடுதலைக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அவ்விடுதலையானது ஸ்தம்பிதம் அடைந்தது.

இந்நிகழ்வானது விடுதலைக்குரிய கைதிகளாகிய எம்மத்தியில் ஏமாற்றத்தையும் வேதனையையும் விரக்தியையும் ஏற்படுத்தியது. தாங்கள் புரிந்து கொள்ளாதது ஒன்றல்ல.

தங்களிடம் சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்தினூடாக எம்மால் 01- 04- 88 இல் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கடதாசிகளை ஆதாரமாக வைத்து 23-04-88 இல் பாதுகாப்பு அமைச்சரும் அவரின் செயலாளரும், உயர் அதிகாரிகளும் எமது விடுதலை சம்பந்தமாக மாநாடு கூட்டினர்.

இதன் படி புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ ஆகிய விடுதலை ஸ்தாபனங்களை சேர்ந்த சககைதிகள் 175 பேர் இங்கிருந்து 24- 04- 88 இல் தொடங்கி 19-05-88 வரையிலான காலப்பகுதியில் பகுதி பகுதியாக விடுதலையாகினர்.

எம் மத்தியில் உள்ள சித்த சுவாதீனம்அற்றோரும், நோயாளிகளென வைத்தியரால் சிபார்சு பண்ணப் பட்டோரும், நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண் அரசியற் கைதிகளும் இதுவரை வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் இருக்கும் 40 வயதிற்கு மேற்பட்டோரும் திருமணமானவர்களும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இது வரை அது சாத்தியமாகவில்லை.

பின்வரும் அம்சங்களை தங்கள் முக்கிய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

● இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு வருடம்பூர்த்தியாகிறது. ஒப்பந்த பிரகாரம் மூவாயிரத்திற்கு மேற்பட்ட கைதிகளை தாங்கள் விடுதலை செய்து எஞ்சியுள்ள எங்களைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது ஒப்பந்த நடைமுறைப்படுத்தலுக்கு முரணானதும் நியாய பூர்வமற்றதுமாகும்.

● விடுதலை இயக்கங்களின் ஆயுத ஒப்படைப்பினையும் எமது விடுதலையையும் சம்பந்தப்படுத்துவது எவ்வகையிலும் பொருத்தமற்றதாகும். ஏனெனில் அண்மையில் இங்கிருந்த கைதிகளில் 175 பேரை இயக்கங்களின் அடிப்படையில் விடுதலை செய்தமை எதுவித ஆயுத ஒப்படைப்பும் இன்றி தங்களின் கருணை மிகுந்த உத்தரவின் பேரிலேயே நடைபெற்றது.

● இங்குள்ள கைதிகள் அனைவரும் பொது மன்னிப்புக் கோரிக்கைகளின் கீழ் சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்தினூடாக தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கடதாசிகளில் கையொப்பமிட்டுக் கொடுத்துள்ளனர். சத்தியக் கடதாசிகள் ஒப்படைக்கப்பட்டு 3மாதமாகியும் நாம் விடுதலையாகவில்லை.

[illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மகா கும்பாபிஷேகம்

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி கோவிலில் புதிதாக அமைக்கப் பெற்றுள்ள விநாயகப் பெருமான் ஆலயத்தில் விநாயகப் பெருமானுக்கும், புதிதாக அமைக்கப் பெற்ற வசந்த மண்டபத்தின் கலசங்களுக்கும் எதிர் வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இதன்முன்னோடியான கிரியைகள் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் நடைபெறும்.

சிவஸ்ரீ கந்தசிவபாதசுந்தரக் குருக்கள், சிவஸ்ரீ ச மகாலிங்க சிவக் குருக்கள் ஆகியோர் பிரதம குருக்களாகக்கலந்து கொளவர். (சி-75)

## வாசகர் திருமுகம்

### முருகமூர்த்தி வீதியின் அவல நிலை தீருமா?

மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருக்கும் முருகமூர்த்தி வீதி இற்றைக்கு சுமார் 25 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக இருக்கிறது.

இவ்வீதியால் போக்குவரத்துச் செய்வோர் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

பாடசாலைகளுக்குச் செல்லும் சிறுவர்கள் மழை காலத்தில் வீதியில் நடந்து செல்லமுடியாதளவுக்கு உள்ளது.

சைக்கிள்களில் செல்வோர் விபத்துக்குள்ளாகிக் காயமடைய நேரிடுகிறது. பல முறை உரியவர்களுக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேலும் இவ்வீதியில் மின்சாரமும் அடிக்கடி தடைப்படுவதும், சிலவேளைகளில் திடீரென்று கூடுவதும் குறைவதுமாக உள்ளது.

இதனால் பலருடைய மின்குமிழ்களும், தொலைக் காட்சிப் பெட்டிகளும், வானொலிப் பெட்டிகளும் செயலற்றுப்போய் உள்ளன.

குறிப்பிட்ட பகுதியின் இச்சீர்கேடுகளைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

சி. செல்லையா
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்,

ஓவியர் செல்வா

## நிறைகுடம் தளும்பாமைக்கு நிறைவான எடுத்துக்காட்டு

உதயனில் வெளிவரும் முச்சந்திமுரளி, அண்மையில் அமரரான செல்வகுருநாதனின் கைவண்ணத்தில் உருவானது.

ஆரம்ப காலத்தில் இருந்து உதயன், சஞ்சீவி பத்திரிகைகளுக்கு ஓவியத்துறையில் உதவியவர்.

அன்னருக்குஅஞ்சலி செலுத்து முகமாக இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

மாணிக்கராசா செல்வகுருநாதன் என்றமாமனிதன் போய் விட்டார்.

கலைத்துறையில் அளவிறந்த ஈடுபாடு, அவற்றில் ஆழ்ந்த அறிவு, கூர்ந்த மதி, ஆற்றல் அடக்கம், பணிவு, நிறைகுடம் தளும்பாமைக்கு நிறைவான எடுத்துக் காட்டு,மனத் தூய்மைக்கும் செய்வினைத் தூய்மைக்கும் உறைவிடம், இங்கிதம் கொஞ்சும் இனிமை.

இத்தனைக்கும், இவற்றுக்கும், மேலான பண்புகளுக்கும் உரியவர் அமரர் செல்வகுருநாதன். இது சம்பிரதாயமான போற்றுதல் அல்ல, அந்தப் பண்பாளரை அறிந்த எவரும் இந்த முற்றுமுழுதான உண்மையை அறிவர்.

### உயரிய சிந்தனை

அமரர் செல்வா கல்வி சமூகம், ஒழுக்கம் என் பவற்றில் உயரிய சிந்தனைகள் கொண்டவர்.

தமது கருத்துக்களை வெளிக் கொணர அவர் தேர்ந்த ஊடகம் ஓவியம், சித்திரம். அன்னவரது கருத்தோவியங்களிலும்,'கார்ட்டூன்' சித்திரத் தொடரிலும், பேச்சிலும் மேலாம் விழுமியங்கள் இலேசான நகைச் சுவையோடும் மெல்லிய கிண்டலோடும் சுடர்விடும்.

அவற்றில் சமூக சீர்திருத்தத்தை வலியுறுத்தும் அறிவுரைகள்இழையோடியிருக்கும். இலங்கைப்பத்திரிகைத் துறையில் அமரர் செல்வா தம் கருத்தோவியங்களாலும், 'கார்ட்டூன்' தொடர்களாலும்செய்த பங்களிப்பு மகத்தானதும் தனித்துவம் மிக்கதுமாகும்.

ஆயிரம் சொற்களில் கூறவேண்டிய அறிவுரையை - சிந்தனைத் தெளிவை அமரர் செல்வாவின் ஒரு கருத்தோவியம், ஒரு 'கார்ட்டூன்' துணுக்கு முழுமையாக எம் முன் வைக்கும். அவ் வாக்கங்கள் பேசாமற் பேசிச் சிந்தனையைக் கிளறும்.

''கந்தப்பு வாத்தியார்'' என்ற 'கார்ட்டூன்' தொடர், ஆண்டுக் கணக்காகத் தலைநகர்ப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்து சிந்தனைப் புரட்சி செய்தது வரலாறு. அவரது கருத்தோவியங்களையும் 'கார்ட்டூன்'களையும் வகை தெரிந்து தனித் தொகுதியாக வெளியிடல் ஏற்புடையது.

### சொல்லின் செல்வர்

கருத்தோவியங்கள் மூலமும், 'கார்ட்டூன்'கள் மூலமும் தான் அமரர் செல்வா பேசுவார் என்பதில்லை. ''அரும் பயன் ஆயும் அறிவினர்'' அவர். சொற்களை அளந்து, சொற்சோர்வு படாமல் சொல்லும் சொல்லின் செல்வர் அவர்.

பல்லோர் மத்தியிலும் அவர் சொல்லும் இரண்டொரு வாக்கியங்கள் நகைச்சுவை என்றநகை அணிந்து, சிந்தனையைத் தூண்டாமலிருந்த சந்தர்ப்பங்கள் நாமறிய இருந்ததில்லை.

அமரர் செல்வாவின் கைவண்ணமும், சொல் வண்ணமும் தந்த சிந்தனைச் சுடர்கள் அன்னவர், தம் வாழ்வில் கடைப்பிடித்த சீரிய கொள்கைகளின் அடிப்படையிலிருந்தே உதித்தவை. எது நேரிடினும் அவர் தம் கொள்கையை விட்டுக் கொடுத்த சந்தர்ப்பம் எதுவுமில்லை.

செல்வ குருநாதன் என்ற மாணிக்கத்தின் பண்புகளையிட்டு, ஒவ்வொரு கோணத்திருந்தும் ஒவ்வொரு குணநலன் மேம்பட்டிருக்கும் அவரது இயல்புகளையிட்டுநாட்கணக்கிலல்ல, மாதக் கணக்கில் பேச



லாம். இவையெல்லாம் ஒளியிழந்து இருளில் தவிக்கும் நண்பர் குழாத்துக்கும், அன்னை தந்தையரினும் மேலாக அரவணைத்துப் போற்றிய கொழுநனை -தெய்வத்தை இழந்து பரிதவிக்கும் அவர் தம் வாழ்க்கைத் துணைவியாருக்கும்,

தந்தையாய்—தாயாய்—நல்லாசிரியனாய் – தமக்கினிய நண்பனாய்த் திகழ்ந்த தாதாவை இழந்து துடிக்கும் அவர்தம் புதல்வியர்க்கும் ஆறுதல் தருமா?

செல்வகுருநாதன் அவர்களின் நினைவுகளும், அவர் தம் ஆசிகளும் என்றென்றும்நிலைத்திருந்து எல்லோரும் ஆறுதலும் அமைதியும் பெற வழி நடத்தட்டும்! வழி நடத்தும்—

பச்சையாய்க் கண்முன் நிற்கும் செல்வா, நீ மறைந்தாயுமல்லை,எமை மறந்தாயுமல்லை! (இ)

—இராஜாயகன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## சாக்கு கேள்விக்கூறு

துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 6000 வெற்றுச் சாக்குகள் இனவாரியாக விற்பனைக்குண்டு. இதற்கான கேள்விக்கூறு விண்ணப்பங்களை தலைமைக் காரியாலயத்தில் ரூபா 100 00 வைப்புப் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளவும். சாக்குகளை தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம். கேள்விக்கூறு விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர், துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம். துணுக்காய் என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 23.8.88-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

பொதுமுகாமையாளர்

5-8-88 (C/6181)

## 'சிவாஜி லக்ஷ்மீஸ்'

ஸ்தாபனத்தாரின் மற்றும் ஓர் சேவை

உங்கள் இல்லங்களிலோ, மின்தறி தொழிற்சாலைகளிலோ உள்ள எல்லாவிதமான தையல் மெசின்கள், மின்தறிகள் Juki மற்றும் நவீன எலக்ரோனிக் தையல் மெசின்கள் பழுதடைந்துவிட்டதா? உடனே எமக்கு அறிவியுங்கள். வெளிநாட்டில் பயிற்சிபெற்ற எமது தொழில்நுட்ப வல்லுனர்கள் உங்கள் வீடுகளுக்கு வந்து ஒரு வருட உத்தரவாதத்துடன் திருத்தி தருவார்கள். வடமாகாணம் முழுவதும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

விபரங்கட்கு:-

"சிவாஜி லக்ஷ்மீஸ்"

(ENGINEERING DIVISION)
19, BROWN ROAD
JAFFNA
WHAT OTHERS CANNOT DO
"SHIVAGIE LUXMES"
WILL. (5726)

## குண்டர் கூட்டத்தை.....

(5-ம் பக்கத்தொடர்ச்சி) திகதிக்குப் பின்னர் கோட்டைக்குள்ளும் அதன் சுற்றுடலிலும் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்கள் என்று குறிப்பிடுவதெ‌ன தீர்மானித்திருக்கின்றோம்.

இதனை சபையினர்எல்லோரும் ஏற்றுக்கொண்டனர்.

அடுத்து மேற்காணும் நான்கு கோரிக்கைகளையும் உள்ளடக்கி மகஜர் தயார் செய்து இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்புவதென்றும்· 15 நாட்கள் அவகாசம் கொடுக்க வேண்டுமென்றும் மகஜரில் சகல தமிழ் ஊழியர்களும் கையெழுத்திட வேண்டுமென்றும் 15 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மீண்டும் இந்த ஊழியர்கூடி மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதென்றும்; அதுவரை கோட்டையினுள் கடமை புரியும் எந்த ஊழியரும் வேலைக்குச் செல்வதில்லையெனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அ. 1987 செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்தின் பின்பு கோட்டைக்குள்ளும், கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியிலும் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்கள் அனைவரும உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

ஆ. இந்திய அமைதிப்படையினரால் கோட்டைக்குள்ளும் வெளியேயும் போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

இ. எங்கள் உயிர்களைப் பயணம் வைத்து நாங்கள் வேலைக்குச் செல்ல ஆயத்தமில்லை.

ஒரு கச்சேரி ஊழியர்:-

ஒருவேளை அவர்களை அங்கேயே வைத்துவிட்டு இந்திய அமைதிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்படுமென்று கூறுவார்கள்- அதை ஏற்கக்கூடாது.

அவர்கள் அங்கு இருக்கும் வரைக்கும் நாங்கள் வேலைக்கு கண்டிப்பாக செல்லமாட்டோம் என்பதைக் கூறவேண்டும்.

## ஆலயம் தொடர்ந்தும் மூடியநிலையில்

திருகோணமலை ஆக 14 சென்ற மாதம் 21 ஆம் திகதி திருமலையில் குண்டு வெடித்த தினம் மூடப்பட்ட கோணேசர் ஆலயம் இன்று வரை திறக்கப்படவில்லை.

எது விதமான பூஜைகளும் நடைபெறவில்லை.

அன்றைய தினம் கோவிலில் சிக்கிக்கொண்ட பூசகரும் மற்றும் ஒருவரும் பின்னர் பாதுகாப்பாக கொண்டு வரப்பட்டனர். .(150)

---

எத்தனைப் பாதுகாப்புத் தந்தாலும் அவர்கள் அங்கே இருக்கும் வரைக்கும் நாங்கள் அங்கு செல்லமாட்டோம். (இ-150)

## CEYGMA PUMPS சிக்மா பம்ப்ஸ்

## விலை குறைப்பு

எமது தொழிற்சாலை மீண்டும் நாவற்குழியில் இயங்குவதால் உற்பத்திச் செலவு குறைந்துள்ளது. அதற்கேற்ப எமது மின் மோட்டர்களின் விலைகளைக் குறைத்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

புதிய விலைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1/2 HP | — | 1" x 1" | — | 3500-00 |
| 1/2 HP | — | 1 1/2" x 1 1/4" | — | 3950-00 |
| 1 HP | — | 1 1/2" x 1 1/4" | — | 4750-00 |
| 1 HP | — | 2" x 1 1/2" | — | 5250-00 |
| 1 1/2 HP | — | 2" x 2" | — | 5850-00 |

குபோடா என்ஜினுடன் பொருத்தப்பட்ட 2" Pump —8250-00

ஒரு வருட உத்தரவாதம்! விற்பனைக்குப் பிந்திய சேவை!!

உங்கள் தேவைகளுக்கு நாடுங்கள்:

யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்
UNITED AGRO ENGINEERING
274/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
( பெரியாஸ்பத்திரி முன்பாக )

தொழிற்சாலை: நாவற்குழி - கைதடி.

(C 6135)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி கந்தையா நாகம்மா

| மலர்வு | உதிர்வு | திதி |
|---|---|---|
| 28-6-1900 | 27-7-87 | 14-8-88 |

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எங்கள் அனைவருக்கும் நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே! நீர் எம்மை விட்டு இறைவனடி சேர்ந்து ஒருவருடம் ஆகிறது. உங்கள் நினைவுகள் எங்கள் இதயத்தில் அணையாத தீபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை உளமாரப் பிராத்திக்கிறோம்.

அன்புள்ள

சகோதரன்; மைத்துனிமார்; மக்கள்; மருமக்கள்; பேரப்பிள்ளைகள்; பூட்டப்பிள்ளைகள்;

தமிழகம்,
4 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (5768)

நடைபெறுகின்றன

# A/L - 90, 89 [விஞ்ஞானம், வர்த்தகம், கலை பிரிவுகள்]

# O/L பழைய பாடத்திட்டம்; ஆண்டு- 11 புதிய பாடத்திட்டம்

மற்றும், TYPING, SHORT HAND வகுப்புக்கள் SPOKEN ENGLISH WITH GRAMMAR

ஆண்டு:- 5, 6, 7, 8, 9, 10 ஆம் வகுப்புக்கள்; ஆண்டு- 11 வாராந்த பயிற்சி மதிப்பீடு

அனைத்துக்கும் யாழ் நகரில் ஒரே இடம். சிறந்த ஆசிரியர் குழு, சிறந்த நிர்வாகம்.

### A/L [விஞ்ஞானம்]

| | |
|---|---|
| இரசாயனம் | - மகாதேவா |
| | - பாலபாபு |
| பௌதிகம் | - நந்தகுமார் |
| தாவரவியல் | - பாலா |
| விலங்கியல் | சிவபாதம், நரேன்,குலேன் |
| தூய கணிதம் / பிரயோக கணிதம் | ஆறுமுகம், தீபன் |

### A/L [வர்த்தகம், கலை]

| | |
|---|---|
| பொருளியல் | - சண் |
| வர்த்தகமும் நிதியும் | - கேசவன் |
| கணக்கியல் | - ஞானசேகர் |
| அளவையியல் | - சோதிலிங்கம் |
| தமிழ் | - T.M சுந்தரலிங்கம் |
| இந்துநாகரிகம் | - ஜோதீஸ்வரன் |
| புவியியல் | - ஜேசுதாஸ் |
| அரசியல் விஞ்ஞானம் | - நிர்மலன் |

### O/L, ஆண்டு-11

| | |
|---|---|
| விஞ்ஞானம் | BOND, கதிர், ராஜ்-தேவ் |
| கணிதம் | - தளையரட்ணம் |
| தமிழ் | - T.M சுந்தரலிங்கம் |
| சமூகக்கல்வி | - ஜேசுதாஸ் |
| ஆங்கிலம் | - ஜெயக்குமார் |
| வர்த்தகமும் கணக்கியலும் | துரை |
| சுகாதாரக்கல்வி | - ராஜ்-தேவ் |
| விவசாயம் | - நரேந்திரன் |

# BOND INSTITUTION

## 58 A, STANLEY ROAD, JAFFNA.

ஆண்டு-11 தொகுப்பு மதிப்பீட்டுக்குரிய பிரத்தியேக வாராந்த பயிற்சி மதிப்பீடு - வாராவாரம் இலவசமாக நடத்தப்படுகிறது.

எமது நிறுவனத்தில் கல்வி கற்காத மாணவர்களும் பங்குபற்றி பயிற்சி பெற்றுக்கொள்ளலாம்.

எமது தலைமை அலுவலகம் நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் 1988-08-27 அன்று ஆரம்பிக்கின்றது.

BOND INSTITUTE, Hospital Road, Jaffna.

[C 6183]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

**பொருள்:**
குறையாத விளைபொருளும் தக்க அறிஞரும் கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
14-08-1988 த. பெ. இல. 23


## மனத்திசை மாறட்டும்!

சார்க் எனப்படும் தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்புச் சங்கத்தின் உச்சி மாநாடு திட்டமிட்டபடி, முன்னர் அறிவிக்கப்பட்டவாறு கொழும்பில் நடக்காது! பாகிஸ்தானில் நடக்கப்போகிறது!!

ஏற்கனவே நிர்ணயித்தவாறு எதிர்வரும் நவம்பர் மாதத்தில் மாநாட்டைக் கொழும்பில் நடத்த முடியாமல் இருப்பதற்கு காத்மண்டு வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் கூறிய காரணம் ஆராயப்படவேண்டியதொன்று.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கெனச் செய்து கொள்ளப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தம் உரிய விதத்தில் — எதிர்பார்க்கப்பட்டவாறு அமுல் செய்யப்படவில்லை —

நவம்பர் மாதத்துக்கு முன்னர் நாட்டில் சகஜ நிலை திரும்பக்கூடிய வாய்ப்புக் காணப்பட்டபோதிலும், சார்க் மாநாட்டை கொழும்பில் நடத்தும் விஷயத்தில்எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டி உள்ளது —

சில குழுக்கள் அரசாங்கத் தடையையும், பாதுகாப்பையும் மீறி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடலாம்—

இத்தகைய சம்பவங்களினால் உற்சாக மற்ற நிலை தோன்றலாம். அது வெளிநாட்டுத் தலைவர்களுடனான நட்புறவையும் பாதிக்கலாம் — இவ்வாறு காரணம் காட்டினார் அமைச்சர் ஹமீத்.

உண்மையிலேயே நவம்பர் மாதத்துக்கு முன்னர் நாட்டில் சகஜ நிலை ஏற்பட்டுவிடும் என்றால் — வன்முறைகள் ஓய்ந்து விடும் என்றால் — கொழும்பில் மாநாட்டை நடத்துவதற்கு அரசு அஞ்சியிருக்காது; அஞ்ச வேண்டிய தேவையும் இல்லை.

சகஜ நிலை என்பது நாட்டின் எட்டுத் திக்குகளிலும் அமைதி நிலவுதல்; வன்முறை எதுவும் இன்றி மக்கள் அச்சமின்றிப் பாதுகாப்பாக வாழ்க்கை நடத்தக்கூடிய நிலை உருவாகுதல் என்றே அர்த்தப்படும்.

நிச்சயமாக அப்படி ஒரு சாதாரண நிலை ஏற்பட வேண்டுமானால்—

தெற்கில் இலங்கை அரசாங்கத்துக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும், வடக்கில் இந்திய அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் சமரசம் ஏற்படவேண்டும். அதுதான் யதார்த்த நிலை.

நவம்பருக்கு முன்னர் இருபக்கங்களிலும் சமரசத்தை ஏற்படுத்தக்கூடிய விருப்பமும், செயல் திறனும் இலங்கை அரசாங்கத்துக்கு இருந்தால் மட்டுமே அது சகஜ நிலை குறித்து நம்பிக்கை கொள்ள முடியும்.

அரசுத் தலைவர் ஜனாதிபதியும், மற்றும் அவரது சகபாடிகளும் பதவியில் இருந்தும், செயற்படுவதில் இருந்தும் சகஜநிலை திரும்பும் என்று நம்பிக்கை கொள்ளக்கூடிய அளவுக்குச் சிறு மின்னல் கீறு தானும் தெரியவில்லை.

இந்த உண்மைநிலை தெரிந்து விடக்கூடாது என்பதற்காகவே, அமைச்சர் ஹமீத். நவம்பர் மாதத்துக்கு முன்னர் சகஜநிலை திருப்பிவிடும் வாய்ப்புள் இருப்பதாக காத்மண்டுவில் முழுப் பூசனிக்காயை சோற்றில் புதைக்க முயன்றிருக்கிறார்!

வடக்கில் மட்டுமல்ல, தெற்கில் மட்டுமல்ல, நாட்டின் சகல பகுதிகளிலும் வாழும் மக்கள் அமைதியைத் தான் விரும்புகிறார்கள். ஆனால் அந்த நிலையை உருவாக்க அரசாங்கம் தான் செயற்படுவதாக இல்லை.

பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறும் அரசுத் தலைவர்கள், அதனை அரச பயங்கரவாதத்தால் அல்லது அடக்கு முறையால ஒழிக்கலாம் என்று நினைப்பதை விட, அரசியல் தீர்வுமூலம் தான் தீர்க்கலாம் என்பதை உணர்ந்து கொண்டால், அவ்வாறே செயற்பட்டால் நாட்டில் சகஜ நிலை திரும்புவது கஷ்டமான காரியமல்ல. மனம் உண்டானால் இடமுண்டு.

மாநாடு ஒன்றைக் கொழும்பில் நடத்த முடியாத இயலாமை, இலங்கை அரசுக்கு உண்டு என்று உலக நாடுகளுக்குக் காட்டி, அவமானம் அடைவதை விட, அரசியல் தீர்வுகள் மூலம் நாட்டில் சகஜ நிலையை உருவாக்க ஆட்சி அதிகாரத்தில உள்ளவர்களின் மனத்தில் திசைமாற்றம் அவசியம். அந்த மாற்றம் இல்லாமல் நாட்டு நிலைமையில் மாற்றம் காண்பது மிகமிகக் கடினமாகவே இருக்கும். இதை அவர்கள் உணர வேண்டும்; உணர்ந்து செயற்பட வேண்டும். செய்வார்களா?

---

அரசியல் சீர்திருத்தம் வரும்வரை

# பர்மாவில் அரசு எதிர்ப்புக் கிளர்ச்சி தொடரும்!

## அரசுத்தலைவரின் இராஜினமாவுக்குபின் அறிவிப்பு

ரங்கூன், ஆக 13

பர்மாவில் அரசியல் சீர்திருத்தம் இடம் பெற்று பல கட்சி அரசமைப்புமுறை அமுலுக்கு வரும் வரை போராட்டம் தொடரும் என்று அரசு எதிர்ப்பு கிளர்ச்சி அமைப்பு அறிவித்துள்ளது.

பர்மா ஜனாதிபதி சின் லுவின் ராஜினமாச் செய்த பின்னர் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

பதினெட்டுத் தினங்களே ஜெனரல் லுவின் பதவியில் இருந்தார்.

ஐந்து தினங்களாக நடந்த கிளர்ச்சியில் ஆயிரத்துக்கு அதிகமான பொதுமக்கள் உயிரிழந்தனர்.

ஆட்சியாளருக்கு எதிராக கிளர்ச்சி நடத்திய மக்களுக்குக் கிடைத்த முதல் வெற்றியாக ஜனாதிபதியின் ராஜினமா கருதப்படுகிறது.

★ அரசியல் சீர்திருத்தம் இடம்பெற வேண்டும்.

★ 26 ஆண்டுகளாக ஆட்சி நடத்திவரும் சோஷலிச புரோகிராம் கட்சி கலைக்கப்பட வேண்டும்.

★ சுயாட்சி அமைப்புத்திட்டத்தின் மூலம் தனிநாடுக்காகப் போராடிவரும் சிறுபான்மை மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

★ சிறை வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும்.

இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை அரசு எதிர்ப்புக் கிளர்ச்சிதொடரும்என்று மாணவர் அமைப்பு அறிவித்துள்ளது. (எ)

---

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ்

# 3 லட்சத்து 40 ஆயிரம் பேர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்

திருச்சி, ஆக 13

சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி 3 லட்சத்து 40 ஆயிரம் பேர் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இன்னும் 1 லட்சத்து 6 ஆயிரம் பேர் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசின் கிராம கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் திருச்சியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2 லட்சத்து 30 ஆயிரம் இந்தியா வம்சாவழியினருக்கு இலங்கைப் பிரசா உரிமை வழங்கப்பட்டது.

இன்னும் 2 லட்சத்து 39 ஆயிரம் பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும்

இந்தியப் பிராசாவுரிமை பெற்ற 80 ஆயிரம் பேர் இலங்கையில் உள்ளனர். அவர்கள் இந்தியா போகவிரும்பவில்லை.

அதுபோல இலங்கைப் பிரசா உரிமை பெற்ற 50 ஆயிரத்துக்கும் 1 லட்சத்துக்கும் இடைபட்ட இந்திய வம்சாவழியினர் இலங்கை திரும்பமறுத்து இந்தியாவில் தங்கியுள்ளனர்.

அவர்கள் அனைவரையும் அந்தந்த நாட்டிலேயே தங்கி இருக்க அனுமதிக்கும்படி இங்கை, இந்திய அரசுகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கேட்டுள்ளது.

ப்படி அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார். (இ-எ)

---

வெளி உலகில்

## தனிநாடு தான் தேவை! பலஸ்தீனியர் அறிவிப்பு

ஜெரூசலம், ஆக 13

பலஸ்தீனியர்களுக்குத் தனிநாடு தான் தேவை; வெளிநாட்டில் இருந்து இயங்கும் பலஸ்தீன அரசாங்கம் இல்லை.

இப்படி பலஸ்தீனவிடுதலை முன்னணி நேற்று அறிவித்தது.

வெளிநாட்டில் இருந்து இயங்கும் பலஸ்தீன அரசு ஒன்றை அங்கீகரிக்கத் தயாராகஜோர்தான் மன்னர் ஹூசேன் முன்னர் அறிவித்திருந்தார்.

இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப்பகுதிகளில் பலஸ்தீன நாடு அமைக்கப்படுவதை இறுதிவரை எதிர்ப்போம் என்று இஸ்ரவேல் பிரதமர் ஷாமிர் தெரிவித்தார். (எ)

---

### சுவாமி கருத்து

புதுடில்லி, ஆக 13

திரு. ராமகிஷ்ண ஹெக்டேயின் உத்தரவின் பேரில் தான் டெலிபோன் உரையாடல்கள் ஒற்றுக் கேட்கப்பட்டன.

ஜனதா எம். பி. டாக்டர் சுப்பிரமணியசுவாமி நேற்று ராஜ்யசபாவில் பேசுகையில் தெரிவித்தார். (எ)

### அழைப்பு நிராகரிப்பு

மனுகுவா, ஆக 13

சமரசப் பேச்சுக்களை நடத்த வருமாறு நிக்கரகுவா அதிபர் டானியல் ஒட்டேகா விடுத்த அழைப்பை கொன்ரு கிளர்ச்சியாளர்கள் நிராகரித்து விட்டனர்.

நிக்கரகுவா தலைநகரில் நடத்தப்படும் எந்தச் சமசரப் பேச்சுக்களிலும் கலந்து கொள்ளமாட்டோம் என்று கொன்ரு அமைப்பு அறிவித்து விட்டது. (எ)

### அதிபர் றேகன் கோர்பச்சேவுக்கு கடிதம்!

வாஷிங்டன், ஆக. 13

சைபீரியாவில் உள்ள ராடர் நிலயத்தை அகற்றுமாறு அமெரிக்க அதிபர் றேகன் சோவியத் தலைவர் கோர்ப்பச்சேவ்வைக் கேட்டிருக்கிறார்.

இதுசம்பந்தமாக திரு. றேகன், திரு கோர்ப்பச்சேவுக்குக்கடிதம் அனுப்பி வைத்தார்.

சைபீரியாவில் உள்ள ராடர் நிலயம் 1972 ஆயுத உடன்பாட்டை மீறுகிறது என்று திரு. றேகன் தெரிவித்தார். (எ)

---

கணக்கு காட்டத் தயாரா?

## சிதம்பரத்திடம் கருணாநிதி கேள்வி

விழுப்புரம், ஆக 13

சென்னை கடற்கரையில் ஒரு பொதுக் கூட்டம் போடுவோம் அதில் தேர்தல் நிதி எப்படி எப்படி யாரிடமிருந்து வந்தது என்று பட்டியல் போட்டுக் காட்டுவோம். அதே மேடையில் காங்கிரசார் தாங்கள் பெற்ற பணத்திற்கு கணக்கை காட்டத் தயாரா? என்று மத்திய அமைச்சர் சிதம்பரத்திற்கு கருணாநிதி கேள்வி எழுப்பினார்.

தென் ஆர்க்காடு (வடக்கு) மாவட்ட தி.மு.க. சார்பில் நிதியளிப்பு விழா பொதுக் கூட்டம் திண்டிவனத்தில் நடைபெற்றது

கருணாநிதிஇக்கூட்டத்தில் பேசுகையில்; இதுவரை ரூபா இரண்டரை கோடி தேர்தல் நிதி வந்துள்ளது என்றும் கணக்கு முறைப்படி உள்ளது என்றும் அவர் கூறினார்.

தன்னுடைய கட்சியினர் யாரையும் வற்புறுத்தி அல்லது கட்டாயப் படுத்தி நிதி வசூலிக்கவில்லை என்றும், ஆனால் மறைமலை நகர் கூட்டத்திற்கு யார்யாரை கட்டாயப்படுத்தி வசூல் செய்தார்கள் என்று சிதம்பரத்திற்கு அவர் கேள்வி எழுப்பினார்.

திமுகவோ அல்லது தானோ வன்னியருக்கு எதிரி அல்ல என்றும் அவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி ராமச்சந்திரன் தலைமை வகித்தார். ஆற்காடு வீராசாமி முன்னிலை வகித்தார். (எ-4)

---

# கிளிநொச்சி மக்கள் வங்கி

## கிளையில் பணக் கொடுக்கல் - வாங்கல்

## விரைவில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஆக. 14

மக்கள் வங்கியின் கிளிநொச்சிக் கிளையில் பணக் கொடுக்கல் வாங்கல் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இதற்கான பூர்வாங்க வேலைகளை மக்கள் வங்கி தலைமைப்பீடம் மேற்கொண்டுள்ளது.

கிளிநொச்சி பொலீஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கிளிநொச்சிக் கிளையிலேயே பணக் கொடுக்கல் வாங்கல் நடைபெறும்.

இந்தத் தகவலை மக்கள் வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்பொழுது கிளிநொச்சிப் பகுதி வாடிக்கையாளர்கள் மக்கள் வங்கியுடனான பணக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள மாங்குளம் கிளையையே நாட வேண்டியிருக்கிறது. அத்துடன் பரந்தன், முல்லைத்தீவுப் பகுதி வாடிக்கையாளர்களும் மாங்குளம் கிளையிலேயே பணக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்கின்றனர். (உ-9)

## நிலாவெளியில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம்

திருகோணமலை, ஆக. 14

கடந்த வெள்ளியன்று நிலாவெளி மக்கள் பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலமும், மறியல் போராட்டமும் நடத்தினர்.

சுமார் 2000க்கும் கூடுதலான பெண்கள், பிள்ளைகள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

திடீர் திடீரென்று மக்களைக் கைது செய்வது, தடுத்து வைப்பது ஆகிய நிழ்ச்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம் பெற்றது.

அமைதிப் படையினரின் முகாம் வாசலில் மறியல் போராட்டம் செய்தனர். ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்ததை அடுத்து கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் நிலாவெளிக் கிராமம் சுற்றி வளைக்கப்பட்டு கிராமத்திலிருந்த ஆண்கள் அனைவரும் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஊர்மக்கள் திரண்டெழுந்து குழந்தை குட்டிகளுடன் முகாமுக்குள் படையெடுத்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் முகமூடி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (இ-150)

## பொதுந் தேர்தல் எந்த அடிப்படையில் நடக்கும்

கொழும்பு, ஆக 14

நாடாளுமன்றப் பொதுத்தேர்தலை, மாவட்ட அடிப்படையில் மாகாணசபைத்தேர்தலை நடத்தியது போன்று நடத்துவதா? அல்லது எல்லை நிர்ணயக் கமிஷன் சிபார்சு செய்துள்ளபடி தேர்தல் வலய அடிப்படையில் நடத்துவதா?

இது பற்றி அமைச்சரவை விரைவில் முடிவு செய்யும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன இதனை அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் வெளியிட்டார்.

மாகாணசபை உறுப்பினர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது, உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிப்பது பற்றி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தலைமையிலான கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையும் குழுக் கூட்டத்தில் பரிசிலனைக்கு வந்தது.

அறிக்கையின் படி, மாகாண சபை உறுப்பினராக இருப்பவர் அப்பதவியை ராஜினாமச் செய்த பின்னரே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியும்.

அதுபோல மாகாண சபை உறுப்பினர்கள் வேறு உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக இருக்க முடியாது- என்று சிபார்சு செய்யப்பட்டு உள்ளது.

இந்த அறிக்கை பற்றியும் அமைச்சரவை விரைவில் கூடி முடிவு செய்யும் என்று ஜனாதிபதி தெரிவித்தார். (இ-எ)

---

சமய சந்நிதிகளில்

### குப்பாபிஷேகம்

சாவகச்சேரி ஆக 14

சாவகச்சேரி தெற்கு உழுத்தம்புலம் சித்தி விநாயகர் ஆலய பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இம் மாதம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறகிறது.

### ஆடிப்பூரம்

#### பெருமாள் கோவிலில்

யாழ்ப்பாணம் ஆக 14

ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள்தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஆண்டாள் ஆடிப்பூர உற்சவம் இன்று 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (உ-சி)

#### கொக்குவிலில்

யாழ்ப்பாணம் ஆக 14

கொக்குவில் கிழக்கில் அருள்மிகு ஸ்ரீசாயி துர்க்கா தேவி ஆலயத்தில் இன்றுஞாயிற்றுக்கிழமை ஆடிப்பூரஉற்சவம் நடைபெறும்.

காலை அஷ்டோத்திர சங்காபிஷேகமும், மாலை அம்பாள் வீதியுலாவும் இடம்பெறும். (உ)

#### வேலணையில்

ஆக 14

வேலணை மகாகணபதி ப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை ஆடிப்பூர உற்சவம் நடைபெறும்.(க)

### அறவழிப் பாடசாலை விளையாட்டு போட்டி

கோப்பாய் ஆகஸ்ட் 14

கைதடி சிறுவர் அறவழிப்பாடசாலையிலஇல்ல விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுகிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறுகிறது. பிரதம விருந்தினராக பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி கலந்து கொள்கிறார். (இ-72)

---

## சு.க. பதவிக்கு வந்தால் வேலையற்றோருக்கு மாத அலவன்ஸ்

கொழும்பு, ஆக 14

சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்தால் வேலையற்றோருக்கு மாத அலவன்ஸ் வழங்கப்படும். வேலை கிடைக்கும் வரை இந்த அலவன்ஸ் வழங்கப்படும். எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா கொட்டாஞ்சேனையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

10 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் ஒன்றை சுதந்திரக்கட்சி தயாரித்து உள்ளது.

பதவிக்கு வந்தவுடன் அத்திட்டத்தை நாம் நிறைவேற்றுவோம்.

வடக்கு, கிழக்கு, தெற்கு மாகாணங்களில் இடம்பெறும் தீவிரவாத சம்பவங்களுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனவே பொறுப்பு ஏற்க வேண்டும்.

நடந்து முடிந்த நான்கு நாடாளுமன்ற இடைத்தேர்தல்களில் சுதந்திரக் கட்சிக்கு 1977 தேர்தலிலும் பார்க்க 60 ஆயிரம் அதிக வாக்குகள் கிடைத்தன.

யு. என். பிக்கோ 13 ஆயிரம் வாக்குகளே அதிகமாகக் கிடைத்தன.

இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார். (இ-எ)

## மானிப்பாய் பகுதியில் தாதிகள் பயிற்சி

மானிப்பாய், ஆக. 14

வடமாகாண வைத்திய கல்வி நிலையத்தின் (என். சி. ரி. ஏ.) ஆதரவில் தாதிகளுக்கான பயிற்சிநெறி, பயிற்சி பெற்ற வைத்தியர் குழுவினால் மானிப்பாயில் நடத்தப்பட்டு வருகின்றது.

முதலாவது தாதிமார் பயிற்சிநெறி தற்பொழுது வைத்தியக் கலாநிதி திரு. எஸ். ரி. புவிராஜன் தலைமையில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் பிரிவுத் தாதிமார் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் தற்பொழுது கோரப்பட்டுள்ளன.

இரண்டாம் பிரிவுத் தாதிமார் பயிற்சிநெறி வகுப்புக்கள் செப்டெம்பர் மாதம் முதலாம் வாரத்தில்ஆரம்பமாகும்.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்றி பயிற்சி பெற விரும்புவோர் மானிப்பாயில் உள்ள பிறைற் சென்றர் நிலையத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ-90)

### கிறீன்பீல்ட் அடிக்கல் நடும் வைபவம்

யாழ்ப்பாணம் ஆக 14

யாழ் குருசோ வீதி கிறீன் பீல்ட் சனசமூக நிலைய கட்டட அடிக்கல் நடும் வைபவம் நாளை திங்கட்கிழமை பகல் 12.00 மணி அளவில் நடைபெறவிருக்கிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
* மணிப்புரி
* காஞ்சிபுர * பெனாரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.


# உதயன்

14 - 08 - 1988 ஞாயிற்றுக்கிழமை

* சேட்டிங்ஸ் * சூட்டிங்ஸ்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி இராசரத்தினம் சிவஞானம்மா

குடும்பத் தலைவியின் மரணக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் மற்றும் அனைத்து உள்ளங்களுக்கும், எமது நன்றி.

அத்துடன் இன்று 14- 08- 88 இல் நடைபெற இருக்கும் சபிண்டீகரண வைபவத்தில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்

சந்திரவாசம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (5778)

தோற்றம்: 01- 01- 1927

மறைவு: 15- 07-1988

நடேஸ்வரா------

னர் எவர் மீதும் தாக்குதல் நடத்தவில்லை என்றும்—எவரையும் துன்புறுத்தவில்லை என்றும் சொல்லப்பட்டது. சம்பவம் நடந்த இடத்தை அண்டியுள்ள பகுதிகளில் மக்கள் பதற்றம் அடைந்து காணப்பட்டனர். (ஒ 68 10)

## ஆடிப்பூரத் திருவிழா

சங்… கூடத்… ம்ப…ள் ஆடிப் பூரத் திருவிழா இன்று …லை 8 மணி… த பிற்பகல் 2 மணி…ரை விசேஷ… நடைபெறும். விசேட பேள…ச்சரி…ள் …ண்ணன், மேளக்…ச்சேரி, கோவிந்தராஜபிள்ளை…ர் ஆகியோரின் மேளக்…ச்சேரி…ள் இடம் பெறும்.

ஆடிப்பூர உபயகாரர்.

(5780)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### குலசேகரம் தேவசேகரம்
(ஒபரோய் தேவன்)

மலர்வு: 1958- 04. 17

உதிர்வு: 1983- 08- 14

அன்புச் செல்வமே தேவா!

பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் இருப்பிடமாய், பக்தியின் எல்லையாய், மிளிர்ந்த எம் அன்புச் செல்வமே! அழகுத் தெய்வமே! குப்பிளான் கற்பகப் பிள்ளையார் தந்த கனியே! தந்தவரே தன் கொடி ஏறும் நேரம் ஆட்கொண்டதன் விந்தைதான் என்னே! கண்கண்ட தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஐந்தாம் ஆண்டும் நிறைவேறும் இந்நாளிலும் இன்றுபோல் துடிக்கும்-

பாசமுள்ள
அம்மா, அப்பா, சகோதரிகள், சகோதரன், அத்தான்மார், மருமக்கள், உறவினர், நண்பர்கள். (5731)

## மரண அறிவித்தல்

### திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி
(முன்னாள் பு…யிரத கட்டிடப் பகுதி மேற்பார்வையாளர்)

திரு வேலுப்பிள்ளை கந்தசாமி 13 8 88 அன்று காலமாகிவிட்டார்.

இவர் வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் திலகவதியின் அன்புக் கணவரும். திருமதி விஜயலக்ஷ்மி, செல்வி. தனலக்ஷ்மி, செல்வன் சாந்தகுமார் (சவூதி அரேபியா), நிர்மலகுமார், புரந்தரகுமார், கஜேந்திரகுமார் ஆகியோரின் தந்தையும், திரு. தேவநாதனின் மாமனாரும், நவரெட்ணத்தின் சகோதரனும், கதிர்காமனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14- 8- 88 ஞாயிறு காலை 10. 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, மக்கள்,
மருமகன், சகோதரன்.

115, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். (C 6195)




ரயில்-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட விசேட ரயில் ஓமந்தையில் வைத்துக் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டது.

இதே வேளை மாங்குளம் குண்டுவெடிப்பில் ஏழு ஜவான்கள் உயிரிழந்ததை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்ததாக லங்காபுவத் தெரிவித்தது.

இதற்கிடையில் மாங்குளத்தில் குண்டு வெடிப்பு இடம் பெற்ற அதே நேரத்தில், புளியங்குளத்துக்கும் மாங்குளத்துக்கும் இடையில் உள்ள பகுதியிலும் குண்டுகள் வெடித்தன. அதனால் ரயில் பாதைகள் பலத்த சேதத்திற்குள்ளாகின.

இதை அடுத்துப் புளியங்குளம் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியூர் சென்ற வாகனங்களும், வெளியூரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வாகனங்களும் தடுத்து வைக்கப்பட்டன. பிற்பகலளவில் அவை செல்ல அனுமதிக்கப்பட்டன. (ஓ-10)

புனர்வாழ்வு------

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஞா…ருடன் கலந்துரையாடிய குழு. அவர்கள் தெரிவித்த பல குறைபாடுகளை புனர்வாழ்வு நிலையத்தில் வைக்கே, அதன் பொறுப்பதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர்களை காலை மாலையில் உலவ விடுதல், பத்திரிகைகள் வாசிக்க வசதி செய்தல், கரம் பலகை வழங்குதல் போன்ற விடயங்கள் குறித்துக் குழுவினர் நிலையப் பொறுப்பதிகாரியுடன் கலந்து உரையாடினர். புனர்வாழ்வு நிலையத்தில் உள்ள இடநெருக்கடி பற்றியும் பேசப்பட்டதாக குழுவின் தலைவர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-ஓ-160)

இன்றைய-- --

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நொதேர்ண் விளையாட்டுக் கழக அணியும் யாழ் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணியும் மோதுகின்றன. (க)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 14 - 08 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Sunday 14 th August 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org